# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௲௯௯௪ | மலர் |
| --- | --- | --- |
| ௩௯ | சோபகிருது, புரட்டாசி. 1963 ஆகஸ்ட்டு, செப்டம்பர். | ௬. |


## ஓர் இலக்கண விளக்கம்

(திருவாட்டி. மேனகை அம்மையார், இராணிப்பேட்டை)

தமிழ்ப் பொழிலில் (துணர் 37 மலர் 12 ல்) "ஓர் இலக்கண விளக்கம்" என்ற தலைப்பீந்து புலவர். வை. மு. இராம கிருட்டினன், தமிழ் ஆய்வாளன், அவர்கள் "செத்தான்" என்னுஞ் சொல்பற்றி ஆய்வு நிகழ்த்தியிருந்தனர். அதன்கண் செத்தான் என்பது உண்மைச் சொல்லன்று, அஃது செற்றான் என்பதன் திரிபே எனவும் அதன்பகுதி 'சா' என்பதன்று 'செறு' என்பதே யெனவும் நிறுவிப் போந்தனர். இது குறித்து எழுந்த எமது ஆய்வின் பயனே இக்கட்டுரை யென்றுணர்க.

2. இப்புலவர் வினையடியாகப் பிறக்குஞ் சில சொற்களை எடுத்துக் காட்டியுள்ளனர். அவையாவன :—

அறு — அறுதல் — அற்று — அற்றான்
உறு — உறுதல் — உற்று — உற்றான்
பெறு — பெறுதல் — பெற்று — பெற்றான்,

இவ்வாய்ப்பாட்டானே, 'செறு' என்ற சொல்லையும் செறு—செறுதல்—செற்று—செற்றான் என முடித்துக்காட்டி யுள்ளனர், இஃது அத்துணைப் பொருத்த முடைத்தன்று என்பது எளியேன் கருத்து. என்னையோவெனில், இவ்வாய் பாட்டுத் துணை கொண்டு.

ஒறு — ஒறுதல் — ஒற்று — ஒற்றான்
நிறு — நிறுதல் — நிற்று — நிற்றான்
பொறு — பொறுதல் — பொற்று — பொற்றான்

என முடியும் வழக்காறின்மை கண்டுகொள்க. எனவே எச்சொல்லும் சிறப்பாகப் பொருண் முடிபும் ஒழுகலாறுங் கண்டே முடிக்கப்படும் என்பது பெறுதும். இதனானன்றே இலக்கண ஆசிரியன்மார் பெரும்பான்மையாய் இசையும் ஒரு முடிபைப் பொதுவிதியென வகுத்தும் அவ்விதியேலாதன

வற்றை விதந்தோதிச் சிறப்புவிதியென வகுத்தும் உரைத்தனர்.

3. அன்றியும் இவ்வாய்வாளர் செறு—செறுதல்—செற்று—செற்றான் என்ற சொற்கட்கு அழி—அழிதல்—அழிந்து—அழிந்தான் எனப் பொருள் காண்கின்றார். செற்று, செற்றான் எனற சொற்களின் அமைப்பே அவை பிறவினை நிகழ்ச்சியின் பாற் படுமெனத் தெளிக்கவும் அவை தம்மைத் தன்வினை நிகழ்ச்சியாகப் பொருள் காணற்கு ஏதுயாதோ அறிகிலம். அவ்வாறு பொருள் கோடற் கிலக்கியமும் இன்றே. அறு என்ற சொல்லும் உறு என்ற சொல்லும் தன்வினையாகவே மட்டுமன்றித் தகரமெய்யேற்றுப் பிறவினையாகவும் வருவன வாம். பெறு என்ற சொல் அவ்வாறன்றித் தன்வினையாகவே யியங்கற்பாலது. அஃதேபோல் செறு என்ற சொல்லும் பிற வினையாகத் தகர மெய்யேறி வழங்குமேயன்றித் தன்வினையா யியங்கு மமைவுடைத்தன்று. எனவே ஒரு சில சொற்கள் தன்வினையாயியங்கலின் ஏனையவும் அவ்வாறியங்க வேண்டு மென்பது விதியன்று. அவ்வாறியங்காமையாற் படுவதோ ரிழுக்கு மின்றென்க.

4. இனி, செத்தான் என்ற சொல் "பழம் இலக்கியங் களில் காணமுடியா வொன்று" என இப்புலவர் கூறுதல் விந்தையினும் விந்தையே. என்னை? திக்கெட்டும் இசை பரப்பி வரும் திருக்குறளிலேயே

"ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்"

எனப் பயிலல் காண்க. மற்றும்,

"சுட்டுக் குவியெனச் செத்தோர்ப் பயிரும்" (புறம் 240)
"செத்தோ னவிநயஞ் செப்புங் காலை" (சிலம்பு-மேற்கோள்)
"செத்தால் வந்துதவுவா ரொருவரில்லை" (நாவரையர்)

எனப் பன்முறை பயின்றிருப்பவும் இல்லையெனல் ஆய் வாளரின் நூற்பயிற்சிக் குறைவையே எடுத்தோதும். திருமூலர் ஆண்டுக் கொரு செய்யுள் யாத்தாரெனல் பொருந் தாமை நிறுவப் புக்கு, திரு. இராமநாதப்பிள்ளை, **B. A. Lond.** யாழ்ப்பாணம், அவர்கள் (தமிழ்ப் பொழில் துணர் 38 மலர் 3 ல்) இருசெய்யுட்களை எடுத்துக்காட்டியுள்ளனர். வேறு இருசெய்யுட்களை எடுத்துக்காட்டி இத்தகு செய்யுட்கள் யாக்கப் பல ஆண்டுகள் தேவையே எனத் தாமே இசைந்து தம்மொடேயே முரண்படுவாராயினர். என்னையோ முரண படுமாறு என்னின் ஓர் ஆண்டுவரை யறை தேவையில்லையென எடுத்துக்காட்டிய செய்யுட்கள் சிறப்புப் பாயிரத்தின் கண்ணதாமெனவும் பல ஆண்டுகள் தேவையென இசைந் தவை நூலின் கண்ணதாமெனவும் அறிக. முடிந்த நூலுக்கே சிறப்புப்பாயிரம் வேண்டுமாகலான் சிறப்புப் பாயிரச் செய்யுட் கள் ஓராண்டுவரை யறையென உணர்க. அதனால் முரண்

பட்டதென்க. ஆகலின் ஆய்விற்புகும் அறிஞர்கள் பல்லாற்ருனும் தம் கூற்றுக்குச் சான்று கண்ட பின்னரே முடிவுரைக்க என அவர்களை பெரிதும் இறைஞ்சுகின்றேன்.

5. அன்றியும் செறு என்ற சொற்குக் கறுவு என்பதும் செற்றல் என்பதற்குத் தன்மனத்தே கறுவு கொள்ளல் என்பதும் நேரிய பொருளாம். செற்றல் காரணமாய் நின்ற அழிவினையே செற்று செற்ருன் என்பவை உணர்த்தும். ஆகலின் இயற்கையாணையால் நிகழும் இறப்பைக் குறிக்கும் செத்தான் என்ற சொல் வெகுட்சி காரணமாய் நிகழும் அழிவைக் குறிக்கும் செற்ருன் என்பதன் திரிபே யெனல் சிறிதும் ஏலாது.

6. சாய்ந்தான் என்னும் சொல்லினதே சா என்னும் பகுதியென்பர். பின்னும் காய்ந்தான் என்னும் சொல்லினதே கா என்னும் பகுதியென்பர். ஆயினும் பகுதியின் பொருள் சொல்லின் பொருளின்றும் வேறுபடலை ஏனே உன்னிற்றிலர். என்னையோவெனில் கா என்பது காப்பு என்ற பொருள் தருதலேயன்றிக் காய் என்ற பொருள் தருதலில்லை. சாய்ந்தான் என்பதன் பகுதியே சா என்றக்கால் சார்ந்தான் என்பதன் பகுதி எதுவோ என்பதுகடா? இம்முறையானே ஆய்ந்தான் என்பதன் பகுதி ஆ எனவும் தோய்ந்தான் என்பதன் பகுதி தோ எனவும் கொள்ளக் கிடைக்குமோ கொல்? எனவே இம்முறை ஆய்வு பெரிதும் வழுப்படுவ தென்பதறிக.

7, அகர ஆகாரங்கள் எகரமாய்த் திரிதல் வழக்குப் பயிற்சியின்கண் அமைவதேயாம். இம்மரங்களுள் கருங்காலி யாது எனவோ எது எனவோ வினவலாம். இக்கனி தந்தார் யாவர் எனவோ, எவர் எனவோ வினவலாம். ஈண்டு ஆகாரங்கள் எகரமாய்த் திரிதலைக் காண்க. பருமை, பெருமை யென்பதும் காண்க. சத்தான் என்ற சொல்லே செத்தான் என விகாரப்பட்ட தென்பர் ஒரு ஆய்வாளர் அதற்கு இதே பொருளைத்தரும் சச்சினுடு என்ற தெலுங்குச் சொல்லை எடுத்துக் காட்டுவர். இஃதும் அகர, ஆகாரம் எகரமாய்த் திரிதலையே வற்புறுத்தும். மற்றும் சா என்ற வினையடியாகச் சாவான், சாகின்ருன் என எதிர்கால நிகழ்காலங்களைக் குறிக்கும் சொற்களைப்போல் சாத்தான் அல்லது சத்தான் என இறந்தகால மின்மையும் செத்தான் என்பதே அச்சொல்லாய் வழங்கலும் கண்கூடு.

8. எனவே, இலக்கண உரையாசிரியர்கள் கூற்றுப்படி சா-செத்தான் எனமுதல் ஆகாரம் எகரமாய் விகாரப்பட்ட தென்ற விளக்கமே இப்புலவரின் ஆய்வின்கண் போந்த முடிவினும் முதன்மை யுடைத்தாய் ஏற்றங் கொண்டிலங்குகிறது. எனவே உரையாசிரியர் விளக்கம் யாதொரு மயலும் விளைப்பதன்று என்றறிக.

# மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும்

**வித்துவான். நடேசநாராயணன்**
*கழக உயர்நிலைப் பள்ளி, வாலாசாபாத்து.*

பழமையைப் போற்றுவோருள் பலர், புதுமையை வெறுக்கின்றனர். புதுமையைப் போற்றுவோருள் பலர் பழமையைப் புறக்கணிக்கின்றனர். இதற்குக் காரணம் அவர்கள் கொண்டிருக்கும் அச்சமும் (பயமும்) ஐயமும் கலந்த தவறான கருத்தேயாகும். எடுத்துக்காட்டாக விஞ்ஞானத்தைப் பற்றியும் மக்கள் கொண்டிருக்கும் கருத்து வேறுபாட்டைக் கூறலாம்.

விஞ்ஞான வளர்ச்சி மெய்ஞ்ஞானத்தை அழித்துவிடும் என்றும் மெய்ஞ்ஞான வளர்ச்சி விஞ்ஞானத்தைப் புறக்கணித்துவிடும் என்றும் அஞ்சுகின்றனர். அப்படி அஞ்சுவதற்கு ஏற்பவே இன்றைய நிலையும் உள்ளது எனலாம். எனினும் நடுவுநிலையோடு ஆராய்ந்து பார்ப்பின் ஒரு நல்ல முடிவுக்கு நாம் வரமுடிகிறது அந்த முடிவுப்படியே செயலாற்றினால் மேற் கூறியவாறு அச்சமோ ஐயமோ கொள்ளத் தேவையில்லை.

"அக உலக ஆராய்வின் மூலமாகவே மனித வாழ்க்கையில் முன்னேற்றத்தையும் சீர்மையையும் காணவியலும்" என்பதை மெய்ஞ்ஞானம் அறிவுறுத்துகின்றது. 'புற உலக ஆராய்வின் மூலமாகவே மனித வாழ்வில் முன்னேற்றங் காண முடியும்' என்று விஞ்ஞானம் அறிவுறுத்துகின்றது. எனினும் இவ்விரண்டும் ஒரே குறிக்கோளான மன்பதை வாழ்க்கை முன்னேற்றத்திற்கே மிகுதியும் துணைபுரிகின்றன என்பதை மறுப்பார் இரார்.

எண்ணங்களை உருவாக்கும் கண்ணும் செவியும் ஒன்றேயான ஈர்க்கும் (கிரகிக்கும்) செயலையே செய்கின்றன. எனினும் இரு பொறிகளும் இருவேறு அடிப்படையில் ஈர்க்கின்றன. கண், பார்ப்பதன் மூலமாக ஈர்க்கின்றது; செவி கேட்பதன் மூலமாக ஈர்க்கின்றது. இவை போலத்தான் விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் என்று சொல்லலாம். விஞ்ஞானம் புறவளர்ச்சியின் மூலம் வாழ்க்கைக்கு ஆக்கம் தேடுகிறது: மெய்ஞ்ஞானம், அகத் திருத்தத்தின் மூலம்—அக ஒழுங்கின் மூலம்—வாழ்க்கைக்கு அமைதியையும் இன்பத்தையும் அளிக்கிறது. எனவே ஒன்றினால் மட்டும் நிறைவான முன்னேற்றத்தை எய்திட முடியாதெனத் தெளிக.

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் ஆகிய இவ்விரண்டுமே மனித வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதவாம். விஞ்ஞானத்தைப் புறக்கணித்துவிட்டு மெய்ஞ்ஞானம் ஒன்றை மட்டும் போற்றுவதாலோ அன்றி மெய்ஞ்ஞானத்

தைத் துறந்துவிட்டு விஞ்ஞானம் ஒன்றை மட்டும் வளர்ப்பதாலோ வாழ்வில் நிறைவை எய்திட முடியாது. வாழ்வின் நிறைவுக்கு இரண்டும் தேவையே.

அகத்தைப் பற்றி ஆராய்ந்துணர்ந்து செயலாற்றிவிட்டால் மட்டும் புறச் சாதனங்களான ஆடை, வீடு முதலியன இன்றியும் போக்கு வரவு ஊர்திகள் முதலியன இன்றியும் வாழ்க்கையில் முன்னேற்றங் கண்டுவிட முடியுமா? அன்றிப் புறத்தின் தரத்தை உயர்த்திக் கொள்வதனுல் மட்டும், அன்பும் ஒழுக்கமும் நன்று தீது பிரித்தறியும் சக்தியும் ஒற்றுமை மனப்பான்மையும் பெருமல் வாழ்க்கையில் முன்னேற்றங் கண்டுவிட இயலுமா? இயலாமையே. எனவே மெய்ஞ்ஞானத்தைப் பற்ருத விஞ்ஞானம் முடமானது என்றும் தெளிவு பெற வேண்டும். வாழ்வின் நிறைவுக்கு இரண்டும் தேவையே. எனினும் விஞ்ஞானத்தினும் மெய்ஞ்ஞானம் மேலோங்கி இருக்க வேண்டும் என்பதையே இன்றைய வாழ்க்கை நிலை நமக்குப் புலப்படுத்துகிறது.

பிற நாட்டவர்கள் விஞ்ஞானத்தில் அக்கறை காட்டிய அளவு, மெய்ஞ்ஞானத்தில் காட்டவில்லை. பலர் இம் மெய்ஞ்ஞானத்தில் ஆர்வம் குன்றி இருந்தமைக்குக் காரணம், விஞ்ஞானமே மனித வாழ்க்கையை உயர்த்தும் எனக் கருதினமையேயாகும். ஆகையால்தான் அங்கெல்லாம் மெய்ஞ்ஞான ஆராய்ச்சியினும் விஞ்ஞான ஆராய்ச்சியிலேயே வல்லுநர்களாய்ப் பலர் விளங்கினர்; விளங்குகின்றனர்.

நம் நாட்டவரோ மெய்ஞ்ஞானத் துறையைப் பற்றியே மிகுதியும் ஆராய்ந்தனர். அகப் பண்பாடுகளையே வலியுறுத்தினர்; ஆன்ம விதிகளையே போற்றினர். மெய்ஞ்ஞானமே மனித வாழ்வைச் செம்மைப்படுத்தி உயர்த்தும் என நம்பினர். அதனுல் இத்துறையில் முனிவர்கள், ஞானிகள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், ஆச்சாரியர்கள் எனப் பலர் தோன்றிப் பணி புரிந்தனர்; புரிகின்றனர்,

எனினும் இன்றைய காலத்துக்கேற்ப நம் நாட்டிலும் விஞ்ஞானிகள் தோன்ருமலில்லை, தோன்றினர். அவர்கள் உலகம் போற்றவும் வாழ்ந்தனர்; வாழ்கின்றனர். சர். ஜகதீச சந்திரபோஸ், கே. எஸ். கிருஷ்ணன், சர். சி. வி. இராமன், ஜி. டி. நாயுடு முதலியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் மெய்ஞ்ஞானத்தையே பெரிதும் போற்றிய நம் நாட்டில் தோன்றியதால் தீமை பயப்பனவற்றை ஆராயாது நன்மை பயப்பனவற்றையே ஆராய்ந்தனர். அழிவுத் துறைக்கு ஆராய்ச்சியைப் பயன்படுத்தாமல் ஆக்கத் துறைக்கே பயன்படுத்தினர்.

இவ்வாறு நம் நாட்டவர் ஓரளவு விஞ்ஞானத்தை வளர்த்த போதிலும் அதனை மென்மேலும் வளர்க்க முயல வில்லை; விரும்பவில்லை. விரும்பியிருந்தால் பிற நாட்டவரைப் போல் நம் நாட்டவரும் விஞ்ஞானத்தில் சிறந்திருக்க முடியும். பழங்காலத்திலேயே நம் நாட்டவன் வான ஆராய்ச்சி செய்திருக்கிறான் என்பதைச் சோதிடம் முதலான சாத்திரங்களால் அறியலாம். உயிரியலில் வல்லவனாய் விளங்கினான் என்பதைத் தொல்காப்பியம் முதலான நூல்களால் அறியலாம். கட்டடக் கலையில் வல்லவனாய் விளங்கினான் என்பதைக் கோயில்களாலும் மண்டபங்களாலும் அறியலாம். தாவர இயலில் திறம் பெற்றவனாய் விளங்கினான் என்பதை மருத்துவ நூல்களால் அறியலாம். கைத் தொழிலில் சிறந்து விளங்கினான் என்பதை மெல்லிய நூல் ஆடைகளாலும் கலைத்திறம் விளங்கும் பாத்திரங்களாலும் அறியலாம். பறக்கும் கருவிகளிலும் அவன் சிந்தை சென்றது என்பதை இலக்கியங்களால் அறியலாம். இத்தகைய பேராற்றல் கொண்ட நம் நாட்டவன், முயன்றிருந்தால் விஞ்ஞானத்தை மேலும் மேலும் வளர்த்திருக்க முடியாதா? முடியும். ஆனால் விரும்பவில்லை. நம் நாட்டு வேந்தர்களும் மொழியை, கலையை, சமயத்தை வளர்ப்பதில் அக்கறை எடுத்துக் கொண்ட அளவு விஞ்ஞானத்தில் அக்கறை காட்டவில்லை என்பதை நமக்கு வரலாறு விளக்கும்.

விஞ்ஞானத்தில் அளவுக்கு மீறிய அக்கறையும் ஆர்வமும் காட்டாமைக்குக் காரணம் ஒன்றுண்டு. விஞ்ஞான வளர்ச்சி அளவோடு அமையாமல் நிதானந் தவறிடவும் செய்யும்; நேர்மை மாறிடவும் செய்யும். நான் என்னும் அகந்தையை உண்டுபண்ணி ஒரு காலத்தில் தம் அழிவிற்கே காரணமாய் அமைந்து விடவும் கூடும் என்று கருதினர். ஆனால் மெய்ஞ்ஞான வளர்ச்சியால் இத்தகைய தீங்கு விளையாது. காரணம், மெய்ஞ்ஞானம் தன்னைப்பற்றியே—மனிதன் உள்ளப் போக்கினைப் பற்றியே—மிகுதியும் கூறுவதாக உள்ளதால் தவற நேரும் சமயத்தில் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் (பாதுகாத்துக் கொள்ளவும்) உதவும். அதனால் அகந்தையோ அழிவோ பொறுமையின்மையோ — நிதானமின்மையோ — ஏற்படாதவாறு காத்துக் கொள்ள முடியும் என்பதேயாம்.

மெய்ஞ்ஞானம், கயிறு பிணைக்கப்பட்ட காற்றாடி போன்றது. நம் கையில் கயிற்றின் ஒரு முனை இருப்பதால் காற்றாடியை ஒரு நிலையிலே பறக்கச் செய்ய முடிகிறது. காற்றாடியின் போக்கிலே குறை நேர்ந்தவிடத்து கையில் பிடித்துள்ள கயிற்றால் ஒழுங்குபடுத்திக் கொள்ள முடிகிறது. ஆனால் விஞ்ஞானம் இதைப் போன்றதன்று. அது கயிறறுந்த காற்றடியைப் போன்றது. கயிறறுந்த காற்றாடி ஒரு கணம்

மேலே பறந்தாலும் இறுதியில் அது கீழே விழுந்து கிழிந்தே போகும். எனவே காற்றாடி மேலே உயரவும் ஒரு ஒழுங்கில நிலவவும் கயிறு இன்றியமையாதது போன்றே விஞ்ஞானம் நன்மையே புரிவதற்கும் மெய்ஞ்ஞானம் இன்றியமையாத தாகும். ஆனால் ஒன்று: கயிறு, காற்றாடிக்கு ஒரு துணையாக மட்டுமே இருக்கலாம். ஆனால் மெய்ஞ்ஞானம் அவ்வாறன்று. அது விஞ்ஞான ஒழுங்குக்கு ஒரு துணை மட்டுமன்று, அதற் குரிய ஓர் அடிப்படையுமாகும். வீட்டுக்குச் சுவர்கள் ஒரு காப்பு (வேலி) மட்டுமன்று. அந்தச் சுவர்கள் இல்லாவிட்டால் வீடும் வாழ்க்கை நடத்துதற்குப் பயன்படாது. அது போன்றதே விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும். மெய்ஞ்ஞானம் நிலவா விட்டால் விஞ்ஞானம் நல்வழியில் வளரா. அவ்வாறு வளரி னும் அதனாலாம் பயன்களை அமைதியோடு துய்த்தலும் இயலா.

இத்தகைய தெளிவால்தான் நம் நாடு விஞ்ஞானத்திலும் மெய்ஞ்ஞானத்தைப் பெரிதும் போற்றுகின்றது. அதனால் தான் நம் நாடு உலகத்துக்கே பஞ்சசீலக் கொள்கையைப் பரப்புவதில் ஆர்வமும் அக்கறையும் செலுத்த முடிகிறது. அதனால்தான் நம் நாட்டின் தலைமை அமைச்சர் நேரு உலகத் துக்கே ஓர் அரிய ஒப்பற்ற சமாதானத் தூதுவராக விளங்க முடிகிறது. விஞ்ஞானம் மட்டும் வளரின் இறுதியில் அது அழிவையே தரும் என்பதையும் மெய்ஞ்ஞானமே தேவை யைக் குறைக்கச் செய்து வாழ்வைச் செம்மைப்படுத்தி நிறை வாக்கும் என்பதையும் வல்லரசுகளும் உணர்ந்து கொள்ளு மாறு இன்று நம் நாடு எடுத்துக்காட்டி வருகின்றது.

மெய்ஞ்ஞானத்தில் நம்பிக்கையும் பற்றும் குறைந்து விட்ட காரணத்தால் அறம் நீதி சமயம் போன்ற பண்பாடுகள் ஊன்றி நிலைக்கவில்லை. அதனால் ஒருவரை ஒருவர் நம்பாமல் ஐயுற்று அஞ்சுகின்றனர். ஒருவரை ஒருவர் அழித்து வாழ முயல்கின்றனர்; துன்புறுத்தி மகிழ்கின்றனர். சமாதானத் தின் இன்றியமையாமையை உணர்ந்த போதிலும் மெய்ஞ் ஞானத்தில் நம்பிக்கை இல்லாக் காரணத்தால் உணர்ந்த தைச் செயல்படுத்த முடியாமல் சிக்கித் தவிக்கின்றனர். தீய கருவிகளையெல்லாம் ஆராய்ந்து கண்டு அழிவுக்கு வழி வகுக்கின்றனர். விஞ்ஞானத்தையே ஓர் அச்சமூட்டும் பயங் கரச் சக்தியாக மாற்றிவிட்டனர்.

வாழ்வை வளப்படுத்தவும் மன்பதையை ஓங்கச் செய்யவும் இயற்கையின் புதிர்களை வீடுவிக்கவும் உதவிய விஞ்ஞானம், இன்று வாழ்வைக் கெடுக்கவும் மன்பதையை அழிக்கவும் இயற்கை வாழ்வை நாசப்படுத்தவும் காரணமாய் அமைகிறது. உலகை எந்த நேரமும் அச்சத்தில் ஆழ்த்தி

வருகின்றது. போட்டியையும் பொருமையையும் ஆணவத்தையும் நேர்மை யின்மையையும் (அநியாயத்தையும்) கால் கொள்ளச் செய்கிறது. அது வாழ்க்கைக்கு ஒரு கருவியாய் இருந்தது மாறி, இன்று வாழ்க்கையே அதன் பிடியில் அகப்பட்டுச் சிக்கித் தவிப்பதைக் காண்கிறோம். காயை அறுப்பதற்குச் செய்த கத்தியைக் கழுத்தை அறுக்கப் பயன்படுத்த முனையும் முறையற்ற செயல்போல் இன்று விஞ்ஞானத்தின் குறிக்கோள் தாழ்ந்திருக்கிறது.

விஞ்ஞானத்தில் வளர்ந்த அளவு மெய்ஞ்ஞானத்தில் அக்கறை காட்டத் தவறினமையே இத்தகைய இழி நிலைக்குக் காரணம், மெய்ஞ்ஞானத்தில் நம்பிக்கையின்மையும் (அவநம்பிக்கையும்) அக்கறை இன்மையும் (அலட்சியமும்) கொண்ட நிலையில், விஞ்ஞானத்தால் எய்த்தும் எத்தகைய முன்னேற்றமும் நலம் பயப்பதாக அமையாது, அமைதியையும் மகிழ்வையும் நிலைநாட்ட அந்த முன்னேற்றம் வழி வகுக்காது. அது அல்லலையும் ஏக்கத்தையும் பூசலையும் பொருமையையும் தருவதாகவே அமையும்.

இன்றைய நிலையில் இதனை நீக்கும் வழி விஞ்ஞான வளர்ச்சியைத் தடுப்பதன்று. அதன் வளர்ச்சியை மடைமாற்றம் செய்து வேறு வகையில் செலுத்துவதுதான். அவ்வாறுயின் விஞ்ஞானத்தை வளர்க்கும் பொறுப்பிலுள்ளோர் மெய்ஞ்ஞானத்தில் பற்றும் நம்பிக்கையும் உடையவராக ஆதல் வேண்டும். மெய்ஞ்ஞானத்தின் கண்காணிப்பிலேயே விஞ்ஞானம் வளர்தல் வேண்டும். அதனைப் புறக்கணித்து வளரும் விஞ்ஞானம் எந்த வகையிலும் நன்மையாக முடியாது. தொடக்கத்தில் நன்மையாகத் தோன்றினும் இறுதியில் தீமையாகவே முடியும் என்பதில் ஐயம் இல்லை. அதனுல் மெய்ஞ்ஞானத்திற்கு இழுக்கு உண்டாக்காத நிலையில், அழிவு உண்டாக்காத வகையில் விஞ்ஞானம் வளர்ச்சியடைதல் வேண்டும். மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய வகையிலேயே வளர்க்கப்படல் வேண்டும்.

வேர் கெடாமல் வளமாக இருந்தால்தான் உரத்தையும் நீரையும் பயன்படுத்தித் மரம் ஓங்கி வளர முடியும். வேர், கெட்டிருப்பின் எருவாலும் நீராலும் யாது பயனும் இல்லை. வாழ்க்கைத் தருவின் வேர்தான் மெய்ஞ்ஞானம். அந்தத் தருவின் வளர்ச்சிக்கு உரிய எருவும் நீரும்தான் விஞ்ஞானம். எனவே விஞ்ஞானப் பயனைத் துய்க்க மெய்ஞ்ஞானத்தைக் காத்தல் வேண்டும். விஞ்ஞானத்தை ஒரோவொருகால் ஒதுக்கினும் மெய்ஞ்ஞானத்தை ஒதுக்கக் கூடாது. செயற்கை எருவும் கிணற்று நீரும் இன்றி மழையாலும் மண்ணின் சத்தாலுமே தரு தானுக வளரமுடியும். எனவே விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் இணைந்தே ஓங்க வேண்டியவை

என்றும் எனினும் மெய்ஞ்ஞானமே முதன்மைக் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்றும் தெளிவு கொள்ள வேண்டும்.

உடலை மட்டும் பேணி உள்ளத்தைப் புறக்கணித்தல் உள்ளத்துக்கு அந்தக் கொழுத்த உடல் கட்டுப்படாமல் கெட்டு அழியும். உள்ளத்தை மட்டும் பேணி உடலை அலட்சியப் படுத்தினால் உள்ளத்தின் குறிக்கோள்களை (இலட்சியங்களை) நிறைவேற்ற அந்த மெலிந்த உடலின் ஒத்துழைப்பைப் பெற முடியாமல் ஏங்க நேரிடும். எனவே உடலைப்போற்றி உள்ளத்தைப் புறக்கணிப்பதோ உள்ளத்தைப் போற்றி உடலைப் புறக்கணிப்பதோ கூடாது. உடல் உள்ளம் இரண்டையும் ஒரு சேரப் போற்றிப் பேணுதலே சிறந்தது. மனிதன் உடம்போடு வாழவேண்டும்; மனத்தோடு வாழவேண்டும். விஞ்ஞானத்தைப் பயன்படுத்தி வசதிகளைப் பெருக்குவது மட்டும் போதாது. நோய் குறைந்த உடம்பும் கவலை குறைந்த உள்ளமும் பெறுவதற்கு வழி தேடல் வேண்டும். உடலைப் பேணவே ஆராய்ச்சி உள்ளத்தைப் போற்றவே வழிபாடு. ஆராய்ச்சியே விஞ்ஞானம்; வழிபாடே மெய்ஞ்ஞானம் என்று கூறினும் பொருந்தும். உடலைப் பேணுவது போன்றதே விஞ்ஞானத்தை வளர்ப்பது உள்ளத்தை நெறிப் படுத்துவது போன்றதே மெய்ஞ்ஞானத்தைப் போற்றுவது.

இங்கே இன்னொரு கருத்தையும் நாம் மறந்துவிடக் கூடாது. 'உடம்பு நோய் வாய்ப்பட்டாலும் பெரிய குறையன்று. மனம் நோய்வாய்ப்பட்டால் அதன் பிறகு வாழ்வு சிறக்காது. உடலைப் பற்றி அக்கறை செலுத்தாமல் உள்ளத்தை மட்டும் பேணிப் போற்றுபவர்களுள் ஒரு சிலரே துன்புறுவர். ஆனால் உள்ளத்தைப்பற்றி அக்கறை செலுத்தாமல் உடல் மட்டும் பேணிக் காப்பவருள் மிகப்பலர் கெட்டு அழிவர் என்பதை யாரும் மறுத்துவிடமுடியாது. அது போலவே விஞ்ஞானத்தில் அக்கறை காட்டாமல் மெய்ஞ்ஞானத்தில் மட்டும் அக்கறை காட்டுவதால் ஒரு சிறு இழப்பே நேரக்கூடும். ஆனால் மெய்ஞ்ஞானத்தில் கருத்துச் செலுத்தாமல் விஞ்ஞானத்தை மட்டும் பேணுவதால் எல்லையில்லா இழப்பு நேர்ந்துவிடும் என்பதை மறந்திடக்கூடாது.

உடல் தானே வளரும் தன்மையுடையது. ஆனால் உள்ளமோ படிப்பாலும் பழக்கத்தாலும் பயிற்சியாலும் முயற்சியாலுமே பண்படுந் தன்மையுடையது. அதுபோல விஞ்ஞானம் வளர்தல் இயல்பே, பரவுதலும் எளிதே. ஆனால் மெய்ஞ்ஞானம் அவ்வளவு எளிதில் ஊன்றாது; பரவாது. விஞ்ஞானச் சாதனங்களை, ஒருவன் கண்டுபிடித்தாலும் அது பலர்க்கும் பயன்பட முடியும். ஆனால் மெய்ஞ்ஞானமோ ஒருவன் கண்டு, பலர்க்கும் எளிதில் அமைத்து விடுவதன்று. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே உணர்ந்து செயல்பட

வேண்டியதாயுள்ளது. விஞ்ஞானப் பொருள்கள் பொறி புலன்களோடு மட்டுமே மிகுதியும் தொடர்புடையவைகளாக இருப்பதால் அவற்றை ஒருவன் கண்டு பிடிக்கவும் பலர் பயன் படுத்திக் கொள்ளவும் முடிகிறது. மெய்ஞ்ஞானமோ பெரிதும் மனத்தோடு தொடர்புடையது. அதனால் அதனை ஒவ்வொரு வரும் தங்களுக்குத் தாங்களே உன்னித் தெளிந்து நம்பிப் பின்பற்ற வேண்டியுள்ளது.

இனிவரும் பரம்பரையினர்க்கும் பயன்பட வேண்டும் என்று எண்ணிச் சொத்தைச் சேர்த்துவைக்க முடியும். அதை அடுத்துவரும் பரம்பரை பயன்படுத்திக் கொள்ளவும் முடியும். ஆனால் கல்வியைச் சேர்த்துவைக்க முடியுமா? முடியாது. ஒவ்வொருவனும் தன் முயற்சியாலேயே கற்றாக வேண்டும். அதுபோல இன்றுவரை கண்டுள்ள விஞ்ஞானச் சாதனங்கள் அனைத்தும் இனிவரும் பரம்பரையினர்க்கும் பயன்பட முடியும். ஆனால் மெய்ஞ்ஞானமோ அவர்களே அறிந்து உணர்ந்து அடைய வேண்டிய ஒன்றாக உள்ளது. கண்டுபிடிக்கும் வரையில்தான் விஞ்ஞானச் சாதனங்களுக்கு ஆராய்ச்சி தேவைப்படுகிறது. அதன் பிறகு யார் வேண்டு மாயினும் அதைப் பயன்படுத்தலாம். அதற்காக ஒவ்வொரு வனும் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்பதில்லை. இது, பெற்றோர் சேர்த்துவைத்த சொத்தைப் பிள்ளைகள் அனுப விப்பது போன்ற நிலை. மெய்ஞ்ஞானத்தையோ ஒவ்வொரு வனும் முயன்று மேற்கொள்ள வேண்டியுள்ளது. இது பிள்ளைகள் தங்களுக்குத் தாங்களே கல்வியை முயன்று கற்று வாழும் நிலை.

இதனால் பெறப்படுவது யாதெனில் விஞ்ஞானத்தில் செலுத்தும் அக்கறையைவிட மெய்ஞ்ஞானத்தில் அதிக அக்கறை செலுத்த வேண்டும் என்பதே. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் அக வாழ்வில் மெய்ஞ்ஞானமும் புற வாழ்வில் விஞ்ஞானமும் ஒருசேர மிளிரவேண்டும். என்றாலும் மெய்ஞ்ஞான மேன்மையில் விஞ்ஞானம் விளங்கவேண்டும். அதாவது மெய்ஞ்ஞான ஆட்சியின் கீழ்தான் விஞ்ஞானம் செயல்பட வேண்டும். இதுவே நாடு நலம்பெற நல்லதொரு வழியாகவும் உலகின் அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் உரிய நெறி யாகவும் அமைய முடியும்.

ஆட்சிபெறும் மெய்ஞ்ஞானம் அகத்(து) ஊக்கி என்றால்
அருமைமிகு விஞ்ஞானம் புறத்தூக்கி யாகும்
காட்சிபெறும் புறவுயர்வை விஞ்ஞானம் ஆக்கும்
கருத்திலுறு நினைவொழுங்கை மெய்ஞ்ஞானம் காக்கும்
நீட்சிபெறும் அகநினைவால் புறம்நிகழ்வ தாலே
நிலைத்தவகம் ஒழுங்குறிலோ புறம்வரம்பு மீறு
மாட்சிமையீர்! விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் என்னும்
வரம்புக்குள் வளர்ந்திடிலோ தீங்கில்லை நன்றே!

# வாலி ஒறுக்கப்பட்ட முறை சரியா?

த. இராமநாதப்பிள்ளை B. A. Lond,
யாழ்ப்பாணம் பருத்தித்துறை

தமிழ்ப் பொழில் ஆனி ஆடி இதழில் 'வாலி ஒறுக்கப்பட்ட முறை சரியா' என்னும் தலையங்கத்தோடு எழுதிய கட்டுரையில் வித்துவான் இராமசாமி அவர்கள் இராமன் குற்றத்தை எடுத்துக் கூருமல் வாலியின்மீது அம்பெய்தது பிழை என்ருர். ஏன் அங்ஙனம் செய்தாய் என வாலி வினுவியபோது இராமன் மறுமொழி கூறவில்லை. இராமன் ஒறுத்த முறை சரியா என்பது ஆராய்தற்குரியது. அதுநிற்க வித்துவான் அவர்கள் கூறிய சில கருத்துரைகள் ஏற்கத் தகாதவை. அவை வருமாறு:— சுக்கிரீவன் செய்ந்நன்றி கொல்பவன்; தமையன் பால் சிறிதும் அன்பில்லாதவன்; அரச பதவியைக் கவர எண்ணியமையால் வாலிதன் தம்பியைக் கொல்ல முயன்றது சரி;—ஒரு வினை நன்ருே தீதோ எனத் தீர்க்கும் உரிமை புயவலியுடையோனுக்கே உண்டென்னும் கொள்கை உடையவன் இராமன்:— இவற்றை ஆராய்வாம்,

சுக்கிரீவன் செய்ந்நன்றி கொல்பவன் என இலக்குமணன் எண்ணினன் என்ருர்; அங்ஙனம் இலக்குமணன் கருதியது பிழை; சுக்கிரீவன் இணைவிழைதலில் மயங்கி இராமனுக்குத் துணை புரிதற்கு வேண்டியவற்றைச் செய்யக் காலந் தாழ்த்தானெழியச் செய்ந்நன்றி மறந்தான் அல்லன். சுக்கிரீவன் இராமனுக்காகத் தன் உயிரையும் பொருட்படுத்தாது இராவணனேடு அமர் புரிந்தான் அல்லவா?

சுக்கிரீவன் வாலிமீது அன்புள்ளவன் என்பதும் அரச பதவியைக் கவரவிரும்பவில்லை என்பதும் பின்வரும் செய்யுட்களால் இனிது புலப்படும்.

> பிலம்புக் காய்நெடு நாள்பெயரா யெனப்
> புலம்புற் றுன்வழிப் போதலுற் றுன்தனைக்
> குலம்புக் கான்ற முதியோர் குறிக்கொள்நீ
> அலம்பொற் றுரவ னேயர சென்றலும்—
>
> வான மாளவென் தம்முனை வைத்தவன்
> தானு மாளக் கிளையினிறத் தடிந்து
> யானு மாள்வெ னிருந்தர சாள்கிலேன்
> ஊன மான வுரைபகர்ந் தீரென—

இக்கவிகளால் சுக்கிரீவன் தன் தமையன் வாலி போரில் மடிந்திட்டான் என ஐயற்றுப் புலம்பியதும் தமையனின் பகை வனைப் தொடர எண்ணியதும் முதியோர் வற்புறுத்தியதால்

அரசை ஏற்ருன் என்பதும் தெளிவாகும். ஆகலின் சரண் புகுந்த தம்பியை வாலி கொல்ல முயன்றது குற்றமே. பரதனைப்போல் சுக்கிரீவன் அனபால் சிறந்தவன் அல்லன். ஆயினும் வாலி தாக்குமுன் சுக்கிரீவன் தமையன் மீது ஓரளவு அன்புடையனுக இருந்தான் என அறிவோம்.

வாலி தன் தம்பியின் இல்லாளைக் கவர்ந்தது பிழை என்பதை வித்துவான் அவர்கள் ஒத்துக் கொள்கிருர்கள். வாலி ஒறுக்கப்பட வேண்டியவன் என்பதற்கு ஐயமில்லை. வாலியைப் போர்க்கழைக்காமல் குற்றத்தை எடுத்துக் கூருமல் கொன்ற முறை சரியோ என்பது ஆராய்ச்சிக் குரியதே.

இனி வல்லவன் வகுத்தவாய்க்கலே சரி என்னும் கூற்றை இலக்கிய நூலோரும் அறநூலோரும் ஒருபோதும் ஒத்துக் கொள்ள மாட்டார். இராமன் இக்கொள்கை உடையனுகக் கிட்கிந்தையில் காணப்பட்டான் என்னும் கூற்று பொருத்த மானதன்று, வாலி அறநெறி விலகினுன் என இராமன் தீர்த்தது சரியே; பகுத்தறிவுள்ள வாலி பிறர்மனே விழைந்தது பிழையே. வேதம் உரைக்கும் அறநெறியை நாட்டும் நோக் கத்தை மெச்சியே தண்டகாருணிய முனிவர்கள் இராமனைக் கண்டவுடன் பெரிதும் மகிழ்ந்தனர் அல்லவா?

ஆவுக் காயினும் அந்தணர்க் காயினும்
யாவர்க் காயினு மெளியவர்க் காயினும்
சாவப் பெற்ற ரேதகை வானுறை
தேவர்க் குந்தொழுந் தேவர்க ளாகுவர்

அகத்தியப்படலம்

ஈண்டு அறத்தை நிலை நிறுத்தற்கு இராமன் தன்னுயிரையும் தியாகஞ் செய்யும் நோக்க முடையவனுகத் துலங்குதலைக் காண்க. இராவணன்போல் யான் புயவலியுடையவன், ஆகலின், யான் விரும்பியதைச் செய்வேன் என இராமன் ஒரு போதும் எண்ணவில்லை.

---

தாய்மொழியைப் பண்புத் தொகையாகக் கொள்ளாமல்
தேய்மதியார் வேற்றுமையாச் செப்பிமதித்—தூய்மையொடு
தன்மை மரபொழுக்கந் தன்மானம் கெட்டழிந்து
தொன்மை யழிப்பார் துணிந்து.

ச. பாலசுந்தரம்

# பத்தூரில் பழைய வேள்விச் சாலை

வித்துவான். சி. கோவிந்தராசனுர்,
(தமிழ் விரிவுரையாளர் கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை-2.)

தஞ்சை மாவட்டத்திலுள்ள கொரடாச்சேரி புகைவண்டி நிலையத்திலிருந்து நேர் வடக்காகச் செல்லும் நெடுஞ்சாலையை ஒன்றரைக்கல் அளவில் குறுக்கிடும் வெட்டாற்றின் வடகரைப் பகுதியாக அமைந்துள்ளதே பத்தூர் என்று பெயர் பெறும் சிற்றூராகும்.

இவ்வூரில் சிதைந்து நிற்கும் பழைய கோயில்களில் கல்வெட்டுகள் இருப்பதாக அறிந்த யான், வரலாற்றுச் செய்திகள் கிடைக்கக் கூடுமென்ற அவாவினுல் 2-6-1962-ல், இப்பகுதிக்குச் சென்று ஆராய்ச்சி செய்தேன். ஊரின் மேற்குச் சிறகில் பாழடைந்து கிடக்கும் சிவன் கோயிலையும், அதைச் சார்ந்துள்ள தெருவில் அமைந்து சிதைவடைந்து வரும் திருமால் கோயிலையும் முதற்கண் கண்டு ஆராய்ச்சி செய்தேன். சிவன் கோயிலின் திருச்சுற்றுப் பகுதிகளனைத்தும் இடிபாடுகளுடன் கற்குவியலும் மண்மேடுமாகிவிட முக மண்டப வாயிலும் கருவறையும் புதரடைந்து, மேல்நிலை வரிசைக் கற்கள் பிளவுகளினுல் இடம் நெகிழ்ந்து விழும்நாளை எதிர்நோக்கி நிற்கும் நிலையில் உள்ளன. கருவறையின் அடிப்படை வரிசைக் கற்களில், தேய்ந்தும், புதைந்தும், புதரடைந்தும் உள்ள நிலையில் கல்வெட்டுகள் உள்ளன. கிழக்குப் புறமுள்ள கல்வெட்டினை முயன்று படியெடுத்ததிலிருந்து, ஊரின் பெயர் பத்தூர் என்பதும், கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமான் விஸ்வேஸ்வர தேவர் என்பதும், கோயில் அமைந்துள்ள பகுதி பெருமாள் சதுர்வேதி மங்கலத்தைச் சார்ந்ததென்பதும் புலனுகியது. கல்வெட்டு வருமாறு :—

(1) ஸ்வஸ்திஸ்ரீ கொமாறபன்மர் திருபுவனச் சக்கரவர்த்திக்கு... மகரந்நாயற்று அபர பக்ஷத்து... (2) ஸ்ரீ பத்தூர்... பெருமாள் சதுர்வெதி மங்கல ஸ்ரீகொயில் தாநத்தாரும் நாயனுர் ஆனை காத்த அம்பலத்து உடையார் விஸ்வெஸ்வர தெவர்... (3) வீதியில் வடதுண்டம் கிழ்திக்கில் ஒரு மனையெப் பற்றி வழக்கு உண்டென்று இரண்டு கொயில்...ரெயும் ஸமாராதகமும் முட்டிக் கிடக்க... (4) உடையார் கொயில் திருப்பணி அம்மெயும்...கொயில் ஸார நிகரும் ஸபையாரும் காலும் பிடிபாடும் காட்டி...டவும் ஸ்ரீ மஹெஸ்வரரும்... (எஞ்சிய பகுதி புதைந்துள்ளது)

இக் கல்வெட்டில் சிறப்பாக அமைந்துள்ள செய்தி, சமயச் சார்புடைய மனையைப் பற்றிய வழக்காகும். ஊரின் கிழக்கு மேற்காகவுள்ள தெருவில் இருந்த ஒரு மனையைப்

பற்றி சைவ வைணவக் கோயிலுடையாருள் வழக்கு உண்டாக, அதன் காரணமாக இரண்டு கோயிற் காரியங்களும் தடைபட்டிருந்தன. பின்னர் மனைக்கு ஈடாக நிபந்தம் செய்யப்பட்டதையொட்டி ஒற்றுமை ஏற்பட்டதாகவும் தெரிகின்றது.

இத்தகைய அரிய செய்தியைக் கொண்டுள்ள சிவன் கோயில் மேற்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. கோயிலின் திருமுற்றப் பகுதியைத் தொடர்ந்துள்ள நிலம் மேடு பள்ளமாகக் கிடக்க, அயலே உயர்ந்து செல்லும் சாலையின் மற்றொரு பக்கமே வெட்டாறாகும். எனவே, வெட்டாற்றின் வடகரைப் படுகையில் இச் சிவன்கோயில் உள்ளதென்பதாம்.

இப்படுகைப் பகுதி, இருப்பை மரங்கள் செறிந்து நின்ற தோப்பாக இருந்திருக்கிறதென்பதை எஞ்சி நிற்கும் மரங்கள் உணர்த்துகின்றன. இப்பகுதியில் யான் சென்றபோது, அங்கு செங்கல் காளவாயும் கற்களுக்கு மண் எடுக்கப்பட்டதால் தரை மட்டத்தினும் தாழ்ந்து குழிவடைந்து தொடரும் பள்ளப் பகுதிகளும் காணப்பட்டன. அரை வட்டமாக இருந்த குழியொன்றின் நடுவே குவிந்த மேடாக நின்ற பகுதியின் உடற்பகுதியை வளைத்துச் சுற்றிலும் மண்ணெடுத்த பொழுது, இடையே பெரிய வடிவில் செய்யப் பெற்ற சுட்ட மண் கற்கள் அடைவாகப் பரந்திருந்ததினால், மண்ணெடுத்துக் கல்லறுக்கும் தொழிலாளிகள் இயன்றவளவில் அப்பகுதியைச் சிதைத்திருந்தனர். சிதைந்தது போகப் புதையுண்டு கிடந்த பகுதியின் தோற்றம் பழமையைக் கொண்டிருந்ததனால், அம் மேட்டை நன்கு அகழ்ந்துகாண அவாவுற்று அப்பகுதிக்குரிமையுடையாரின் துணைகொண்டு அகழ்ந்தபோது, உள்ளே செங்கற்றளத்தின் அமைப்பு கிடைப்பதாயிற்று. அஃது எண் கோண வடிவில் அமைக்கப்பட்ட அகலிடமாகத் தெரிந்தது. தளவரிசைக் கற்கள் இருபது அங்குலப் பக்கங்களுடன் நான்கே முக்கால் அங்குலத் தடிப்புடைய சதுரக் கற்களாகவும், இதே தடிப்பும் பக்கமுமுள்ள முக்கோணக் கற்கள் கருகிய நிலையில் சுடப்பெற்றிருந்ததைத் கொண்டும், கற்களை அமைக்க எடுத்துக்கொண்ட மண் கலவையுள் நெற்பதர்களும், புற்களும் இடப்பட்டு சுடப்பட்டுள்ளதையும் ஆராய்ந்தறிந்தபோது, இக்கற்கள் வேள்விச் சாலையமைப்பதற்குரிய தூய முறைப்படி செய்யப்பட்டிருக்க வேண்டுமென்பது நன்கு புலனாகியது. இத்தகைய தூய பெருங் கற்களால் அமைக்கப்பட்ட தளத்தின் அடிப்பகுதி மேலேயுள்ள பரப்பில் குறையாதபடி, ஒன்றன் கீழொன்றாக ஐந்து வரிசை அடிப்படைகள் அமைக்கப்பட்டிருந்தன. அதன் கீழே மூன்றடி ஆழம் வரையில் மேற்கூறிய தளப் பரப்பளவிற்கு தூய மணல் இடப்பட்டிருந்தது. தளவரிசை கற்களுக்கு அடிப்படையாக அடைந்த பகுதியின் கீழ் பரப்பாகவுள்ள மணற் செறிவின் நடுவே

மூன்று அழகிய மண் தொட்டிகள் காணப்பட்டன. நெரிந்து நின்ற அவை, நாற்பட்டையாக எழுந்து ஓரடி உயரங் கொள்ள, வாய்ப்பட்டை வேள்விச்சாலையின் அமைப்பைப் போல எண் கோணவடிவுடன் ஆக்கப்பட்டிருந்தன. தொட்டி கட்குள் தூயமணலுடன் எரிந்த கரித்துகள்களும் சிறிய அழகிய கலயங்களும் இருந்தன. மற்றும் மேற்றளத்தின் ஒரு புறம் மண்ணால் செய்யப்பட்டு சுடப்பெற்ற குவிந்த வாயோடு கூடிய அகப்பையும், அகன்ற மண் தட்டும் கிடைத்தன. இப்பொருள்கள்யாவும் வேத ஆகம விதிப்படி இங்கோர் சிறந்தயாகம் நிகழ்ந்திருக்கிற தென்பதை எடுத்துக்காட்டும் இலச்சினைகளாக அமைந்துள்ளன.

என்ன வேள்வி, யார், எக்காலத்தில் எதன் பொருட்டுச் செய்தது என்பன போன்ற வினாக்கட்கு விடைகாணுதற் குரிய சான்றுகள் தெளிவாக இல்லாவிடினும், கிடைத்த பொருள்களைக் கொண்டும், சூழ்நிலை, ஊரிலுள்ள பெருமாள் கோயிற் கல்வெட்டுச் செய்தி ஆகியவற்றைக் கொண்டும் ஆராயின் இங்கு, சிறந்த வேள்வியொன்று அரசரால், தக்க வேள்வியாசிரியனைக் கொண்டு செய்யப்பட்டிருக்கும் உண்மை ஒருவாறு புலனாகின்றது.

இங்குள்ள நரசிங்கப் பெருமாள் கோயிற் கல்வெட்டுச் செய்திகளுள், பத்தூரில் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண் டளவில், ஆச்சாரிய காணிபெற்ற இராசகம்பீர ஆச்சாரியன் என்ற அந்தணப் பெருமகனார் வாழ்ந்துவந்த வுண்மை தெரி கின்றது. இராசகம்பீரன் என்னும் சிறப்புப் பெயர் இரண் டாம் இராசராசனுக்குரிய தென்பதும், அவனால் எடுப்பிக்கப் பெற்ற ஸ்ரீ இராசராசபுரத்து ஈசுவரன் கோயில் முகப்பு மண்ட பமும் இராச கம்பீர மண்டபம் என்று சுட்டப் பெறுவதும் வரலாறு கண்டதேயாம். எனவே, இவ்வரசர் பெருமான் ஆட்சி செலுத்திய பன்னிரண்டாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில், அரசரால் மதிக்கப்பெற்ற விருதுகளுடன், காணி யாட்சியும் பெற்றுப் பத்தூரில் வாழ்ந்த அந்தணப் பெரியா ராலேயே, வேள்வியொன்று செய்யப் பெற்றிருக்க வேண்டு மென்று கருத இடனுண்டாகின்றது. மற்றும் வேள்விச்சாலை ஆற்றங்கரையில், சிவன் கோயில் முன்னர் அமைக்கப் பட்டிருக்கின்றது. சிவன் கோயிலும், அதனைச்சார்ந்த திருமால் கோயிலும் பன்னிரண்டாம் நூற்றாண்டில் எழுந்த சிற்பச் சுவடுகளுடன் காணப்படுகின்றன. இவற்றைக் கொண்டு ஆராயின் பத்தூரில் ஒரே காலத்தில், சைவ வைணவக்கோயில்கள் எழுந்ததுடன், சிறந்த வேள்வி யொன்றும் இரண்டாம் இராசராசனின் ஆட்சியில் செய்யப் பெற்றிருக்கின்ற தென்றும் உண்மையைக் காண முடிகின்றது. இக்காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டேயாம்.

# ஆதிமந்தி

ச. பாலசுந்தரம்

**ஆதிமந்தி :—**

மருந்தாக என்வாழ்வில் வந்த நல்லோன்
மணத்தையவள் ஏன்விரும்ப வில்லை? ஏழை (194)

எங்குசெல்வேன்? எவர்க்குரைப்பேன்? இனிமேல் ஐயோ
என்னுடலை எரித்தாலும் உள்ளத் துள்ளே
பொங்குகின்ற காதல்பொசுங் காதே—ஐயோ!
பொறையாகப் பிறந்துவிட்டேன் மருதி! பொல்லா
மங்கையெனும் பருவம்வர வில்லை யானல்
மாணவியாய் மகிழ்ந்திருப்பேன்—என்றன் வாழ்வில்
செங்கதிரோன் தோன்ருனே? மருதி ......

[அழுகிருள்]

**மருதி :—** [கலங்கிய கண்களுடன்]

...... ...... ...... தோழி
சிறுமியைப்போல் கலங்குவது நன்ரு காது. (195)

எழுந்திருநீ என்னுடன்வா! எவ்வா றேனும்
இதைமுடித்து வைப்பேன்யான் உன்னைத் துன்பில்
அழுந்தவிட மாட்டேன்வா! ...... ......

**ஆதிமந்தி :—** [மருதியைத் தழுவிக்கொண்டு]

...... ...... ...... அருமைத் தோழி!
அன்பிங்கே வளரவில்லை ஆணவந்தான்
கொழுந்துவிட்டு வளருவதைக் காணுகின்றேன்

**மருதி :—**

கொடுமைகளை மங்கையர்தாம் எதிர்த்தா லன்றி
விழுந்ததிலே சாவாமல் வேறென் செய்வார்?
வினைவறிந்து செயல்புரிய வேண்டும்நாம் வா! (196)

[அப்பொழுது இரும்பிடர்த் தலையார் எதிர்வர ஆதிமந்தியின் சாயலும் முகனும் அவருக்குப் பழைய நினைவுகளை எழுப்புகிறது]

**இரும்பிடர்த்தலையார் :—**

யாரிவர்கள்? ...... ...... ......

[சிந்தனை]

**மருதி :—** [புலவரை யறிந்து]

...... ...... வணக்கம ஐயா!

**ஆதிமந்தி :—** [ஒன்றுந் தோன்ருமல்]

...... ...... ...... வணக்கம்

**இரும்பிடர்த்தலையார் :—**

...... ...... ...... வாழ்க.

[அவர்கள் இருவரும் சென்ற பின்]

ஞாபகத்தில் வரவில்லையே! இவள் முகத்தை
நேருகின்ற பெண்ணை—ஆம்! "ஆதி" யைப்போல்
நிறைவடிவும் அழகொளியும் உடையாள்—இந்த
ஊரிடத்தே இதுவரை நான் காண வில்லை!
ஒருவேளை அவள் தங்கை?... தங்கை என்று
யாருமில்லை ஆதிக்கு மகளா எண்ண?......
யாதொன்றும் புரியவில்லை... அன்று வேந்தன் (197)

வலங்கருதி வடக்கேகும் பொழுதில் 'ஆதி'
வளருகின்ற கருத்தாங்கி இருந்தாள் என்று
புலம்பியதைச் சிந்தித்தால் ஆதி பெற்ற
பொற்கொடியா நினைப்பதற்கும் பொருந்தும்—நாட்டின்
நலங்கருதி நான்புரிந்த கொடுமை அந்த
நல்லாளைக் கொன்றிருக்கும்... அவளை எண்ணிக்
கலங்குகிறான் கரிகாலன்... தேடிக் காணும்
கருத்தைஎனக் கிவளளித்தாள் போலும்; காண்போம். (198)

[துயர்கலந்த சிந்தனையோடு செல்லுகிறார் புலவர்.]

பதினேழாங் காட்சி முடிவு.

## காட்சி 18.

நடிகர்: ஆட்டனத்தி
சரத்குமாரன்

இடம்: காவிரிக்கரையில்
உள்ள மண்டபம்

காலம்: முற்பகல்

[ஆதிமந்தியின் பிறப்புண்மையை செவிலி வாயிலாக மறைந்திருந்தறிந்த ஆட்டனத்தி தன்னையே வெறுத்துக் காவிரியை நோக்கிப் புலம்புகின்றான்]

**ஆட்டனத்தி:—**

என்ன விந்தை!... என்னைப்போல் ஆடுகின்ற
எளியகுலத் துதித்தவளென் றெண்ணி னேனே!

[ஒரு பூங்கொடியைப் பார்த்துக் கழிபடர்கிளவியாக]

மன்னவனின் மகளா நீ? ஆதி மந்தீ!
மன்னிப்பாய் இளவரசி! வணக்கம்... ஆமாம்
சென்னி குலத்து தித்தவள் நீ— இல்லை என்றால்
செழுமதியுன் முகங்கண்டு நாணுமா? சொல்!
பொன்னுருவே! மின்வடிவே! பொற்பின் செல்வீ!
பொறியுணர்வாய் என்னுளத்தேன் புகுந்து அமர்ந்தாய்? (199)

எவ்வகையால் உனைமறப்பேன்? இடந்தோறும் நீ
எழில்பூத்துக் கிடக்கின்றாய்! அந்தோ! இந்த
நவ்வியுன திருவிழியை நாடச் செய்யும்
நறுமலர்உன் முகங்காட்டும்; கனிகள் உன்றன்

கொவ்வையிதழ் நினைப்பிக்கும்—கூவு மிந்தக்
குயில்உனது குரல்காட்டும் மயில்உன் சாயல்
செவ்வியை என் சிந்தையெலாம் நிரப்பும்—அன்பே
[திகைத்து]
சிறுமதியாலினி யிவ்வாறழைக்க மாட்டேன் (200)

தீங்கரும்பே! செந்தமிழே! தேனைக் கூட்டிச்
செய்தஉயிர்ச் சித்திரமே! சிந்தை முற்றும்
ஓங்குகின்ற ஆசையினை எவ்வா றேனும்
ஒழிப்பதற்கோர் வழியுரைக்க மாட்டாயா? ஏ!
மாங்குயிலே! மாதரசை மறப்பதற்கு
மருந்தைச்சொல்! ஆஆஓ! மடிதல் தானே?
[கலங்குகின்ருன் அவன் உள்ளொலி பேசுகிறது]

**உள்ஒலி:—**

ஏங்காதே இடுக்கண்வந் தால்நகைக்கும்
எழுச்சிகொளும் தமிழ்மகனு நீயும்? சீசி! (201)

அறத்தை விட்டுத் தமிழ்பிரிந்து போமா? அந்த
அருந்தமிழை விட்டினிமை தணந்து போமோ?
மறத்தை விட்டுத் தமிழர்பிரி வாரோ தென்னர்
மானம்விட்டு வாழஇசை வாரோ? உன்றன்
நிறத்தை விட்டும் ஆதிமந்தி நீங்குவாளா?
நீளநினைந் தேங்காதே!—செவிலி உன்னைப்
புறக்கணித்தால் உன்காதல் பொய்யாப் போமா?
பொற்கொடிக்குப் படர்கொம்பு நீதான் போ! போ! (202)

[வெறி கொண்டவன் போல் எழுந்து செல்கிருன் அதுகாறும் மறைவிலிருந்து ஆட்டனத்தி புலம்பியதையும் சென்றதையும் பார்த்திருந்த சரத்குமாரன் வெளிப்பட்டு]

**சரத்குமாரன்:—**

அறிவிழந்து கலங்கிமடிந் திடுவா னிந்த
ஆட்டனத்தி என நினைத்தேன்... அடடா! என்ன
செறிவுடனே தெளிவாகப் பேசுகின்ருன்!
சேரனுக்குப் பிறந்திருப்பான் எனும் நினைப்பில்
குறைவில்லைப்—பிடர்த்தலையார் கூற்றை இன்னே
குடக்கோவின் நாட்டிற்கே சென்று காண்போம்;
உறவுடையான் இவனென்ப துண்மை யானல்
உடனேயங் கழைக்கவழி செய்ய வேண்டும். (203)

அங்கிவனை அனுப்பி விட்டால் ஆதிமந்தி
அலமந்து பின்என்னை அடைதல் கூடும்
சங்கதியை யாருக்குந் தெரிவிக்காமல்
தக்கவழி கண்டிவனைத் தொலைத்தல் வேண்டும்;
சிங்கமென எதிர்க்கின்ருன் இவனை வெல்லச்
சிறந்ததொரு சூழ்ச்சியைக் கையாள வேண்டும்

பங்குகொளத் துணையெனக்கு யாருமில்லை—
பார்க்கின்றேன் எப்படியும் இவனைத் தீர்ப்பேன். (204)
[போகிருன்]

பதினெட்டாங் காட்சி முடிவு

## காட்சி 19.

நடிகர் : இரும்பிடர்த்தலையார், கூத்தன்
இடம் : அரண்மனை மண்டபம்
காலம் : முன்னிரவு

[இரும்பிடர்த்தலையார் ஆட்டனத்தியின் வரலாற்றை யறியும் நோக்கோடு கூத்தப் பாணன் வரவை நோக்கியமர்ந்திருக்கிருர்]

**இரும்பிடர்த்தலையார் :—**

பாடல்

பண் : மோகனம் சீர் : ஆதி

முதனிலை

தெய்வத் தமிழ் மொழியே—எங்கள்
சிந்தைக் கிருவிழியே (தெய்வ)

இடைநிலை

வையத்து மாந்தர்கள் உய்யும்படி அருளால்
வான்மழை போறகலைத் தேன்பொழிந் தோங்கிடுந் (தெய்வ)

இறுதிநிலை

காட்டுவிலங் கெனமெய்ப் பாட்டின் உளந்திறந்த
காலத்திலே அறிவின் கோலத்துடன் பிறந்து
பாட்டுத் துறையினிற்பண் பாட்டில் வளஞ்சிறந்து
பண்ணும் பரதமும்நல் வண்ணங் கொளச் சுரக்கும் (தெய்வ)

[கூத்தன் வருகிருன் சேய்மையிற் கண்ட புலவர்]

வாருமையா! வாருங்கள்! நலமா? வாரும்

**கூத்தன் :—**

வணங்குகிறேன் கவியரசே! வணக்கம்—வேந்தர்
சீருடனே தரும்பரிசும் தங்கள் வாழ்த்தும்
சேர்ந்திருக்கக் குறையேது? ... ... ... ...

**இரும்பிடர்த்தலையார் :—**

... ... ... ... நன்று, நாளை
நேருகின்ற விழாவிலும தருமை மக்கள்
நிகழ்ச்சிகளும் வேண்டுமென்ப தரசர் ஆணை
வீரநடம் ஆட்டனத்தி ஆட வேண்டும்
வியந்துலகம் பாராட்டிப் புகழ்தல் வேண்டும். (205)

**கூத்தன் :—** [அழுகையோடு]

அத்தகு பேறில்லாத பாவி யானேன்
அரசேவல் செய்வதற்கும் இயலாதுள்ளேன்
பித்தனைப்போல் தவிக்கின்றேன் புலவ ரேறே!

**இரும்பிடர்த்தலையார் :—**

பெருமைமிக்க ஆட்டனத்தி ...... —...

**கூத்தன் :—**

...... ...... ஐயோ! அந்த
உத்தமனை ஊர்முழுதுந் தேடிவிட்டேன்
ஓரிடத்துங் காணவில்லை ... மகனின் மேலா
இத்தனை நாள் என் உயிர்போல் வளர்த்தேன் ஐயோ!
எனைவிட்டுப் போய்விட்டான் என்ன செய்வேன்? (206)

**இரும்பிடர்த்தலையார் :—**

தாயத்தார் பிள்ளையையும் தன்மகன்போல்
தக்கபடி வளர்த்துள்ளாய்?

**கூத்தன் :—** (துயரோடு)

...... ...... இல்லை மேலோய்
மாயத்தால் கிடைத்ததந்த மாணிக் கம்என்
மரபில்வந்த பிள்ளை யில்லை ...... ......

**இரும்பிடர்த்தலையார் :—** [முன்னுய்வோடு]

...... ...... ...... இந்தச் சோழ
தேயத்து மகன்தானே அதனுலென்ன?

**கூத்தன் :—**

சிந்தைதடு மாறுகின்றேன் கவிஞர் ஏறே!
சேயொத்த செம்மல்என் ஆட்டனத்தி
சேரர்நா டெனக்களித்த செல்வம் ......

**இரும்பிடர்த்தலையார் :—** [வியந்தவர் போல]

...... ...... ...... என்ன? (207)

**கூத்தன் :—**

மலைநாட்டிற் பிறந்தவன் நம்நடன மன்னன்?

**இரும்பிடர்த்தலையார் :—**

மருமக்கள் வழியாலே வந்தான் போலும்?

**கூத்தன் :—**

மலைநாட்டிற் பிறந்தவன்றான் ஆனுல்—பெற்ற
மாண்புடையார் யாரென்ப தறியேன்—அந்தச்
சிலைபோலும் தோளுடையான்; சேரநாட்டுத்
திருவோணப் பெருவிழவிற் கலந்து மீண்டு
சில ஊர்கள் தாண்டிவந்து விட்டபின்னிச்
சிறுகுழந்தைக் குரியவர்யார் என்று பார்த்தோம் (208)
அவரவரும் என்குழந்தை இல்லை என்றூர்
அன்றுமுதல் எனமகவாய்க் கொண்டுவிட்டேன்

**இரும்பிடர்த்தலையார் :—**

இவனுடைய வயதப்போது? ......

**கூத்தன் :—**

...... ...... இரண்டாண் டிற்குள்
இருக்குமெனக் கருதுகிறேன் இனிஎன் செய்வேன் ;

**இரும்பிடர்த்தலையார் :—**

கவலையினி ஒருசிறிதும் படவேண்டா ! என்
காவலரை விட்டவனைத் தேடுகின்றேன்

**கூத்தன் :—**

கவியரசே உங்கள்பெருங் கருணையால் என்
கண்களையான் பெறல் வேண்டும்... வணக்கம்

**இரும்பிடர்த்தலையார் :—**

...... ...... ...... வாழ்க! (209)

[கூத்தன் போகிறான்]

பத்தொன்பதாங் காட்சி முடிவு.

## காட்சி 20.

| | | |
|---|---|---|
| நடிகர் : | வேந்தன் இளஞ்சேரல் | இடம் : சேரநாட்டு |
| | அமைச்சர் | அரண்மனை அரசக்கூடம் |
| | படைத்தலைவர் | காலம் : முற்பகல் |

[போர் கருதி கரிகாலன் அனுப்பிய ஓலையைக் கண்டு வெகுண்ட இளஞ்சேரல் அமைச்சரை அழைத்துச் சூழ எண்ணு கிறான்.]

**இளஞ்சேரல் :—** [வெகுளிச் சிரிப்புடன்]

ஹஹ்ஹஹ்ஹா
காட்டானைச் குணவளிக்கக் கருதுகின்றாய் ?
கரிகாலா ! நன்றுனது கருத்து...சேர
நாட்டாரை நங்கையரா மதித்தாய் போலும்?
நன்று ...... ...... ......

**அமைச்சர் :—** [வந்துகொண்டே]

அரசே வணக்கம் எனை ......

**இளஞ்சேரல் :—**

...... ...... ஆம் அழைத்தேன்
கேட்டீரா செய்தியை யக்கிழட்டு மன்னன்
கெடுமதியால் தூதனிடம் கிளந்த வற்றை?
கூட்டாக ஆட்சிசெயல் நலம் மென்பீரே ?

**அமைச்சர் :—**

குறையென்ன வேந்தே ? ......

**இளஞ்சேரல் :—**

...... ...... என்குடிக் கிழுக்கம் (210)
தேடுகின்றான் செம்பியன் நம் சேர நாட்டுத்
தென்கிழக்குப் பகுதியிலே அமைந் திருந்த
நாடுகளிற் சிலவற்றைத் தன்பாற் சேர்த்து

நவைபுரிந்தானன்றே இக் கரிகாலன் அக்
கேடுகளைத் தவிர்த்தெங்கள் நாடெமெக்குக்
கிடைக்கவகை செயல் வேண்டும் என்றுதூது
பாடுபெற விடுத்தோமே அதற்குச் சோழன்
படைவலியைச் சுட்டி விடை அறைந்துள்ளான்பார்ம்! (211)

**அமைச்சர் :—**
கரிகாலன் கருத்தினை நாம் முற்றும் ஆய்ந்து
கடைசியிலே முடிவிற்கு வருதல் நன்று

**இளஞ்சேரல் :—**
ஒருகாலும் நடவாது... நமது நாட்டை
உளம்ஒப்பித் தரமாட்டான்—குருதி வெள்ளம்
பெருகாமல் உடன்பாடு காண இங்கே
பேராசைக் காரர்களால் இயலாது—ஒன்று
செருவாலே பெறல்வேண்டும் உரிமை; இன்றேல்
சென்னிக்கிங் கடிமை களாய்த்திரிய வேண்டும்

**அமைச்சர் :—**
மன்னு! நம் மண்ணுரிமை இழந்து வாழ
மதியோம் நாம்—இருந்தாலும் ......

**இளஞ்சேரல் :—**
...... ...... வருவ தெல்லாம்
பின்னுக வரட்டுமவன் படைப் பெருக்கால்
பேசுகின்ருன் ...... ...... ......

**அமைச்சர் :—** [அமைதியாக]
...... பிழையில்லை நமது தூதன்
முன்னுக அவன் மொழிந்த முறையைப்பார்த்தால்
முழுமனத்தோ டறிவோடு மொழிய வில்லைச்
சின்னுளாக் கரிகாலன் சிந்தை மாறிச்
செழுமையின்றி இருக்கின்ருன் என்று கேள்வி (213)

**இளஞ்சேரல் :—**
அதனுலே வாய்மதமாய் அறையலாமோ ?

**அமைச்சர் :—**
அவன்கவலை தீரவழி இல்லை போலும்
எதனுலே மனத்துயரை மறக்க லாமென்
றிருக்கும்போ திவ்வழியில் எண்ணம் மாறல்
பொதுவான இயல்பேதான்—போரில் சற்றே
புழுக்கமின்றி இருப்பதற்குக் கூடுமன்றே ?

**இளஞ்சேரல் :—**
அதிகாரவெறி கொண்டோர் அறத்தைப்பற்றி
அணுவளவும் சிந்திப்ப தரிதே யாகும் (214)

**அமைச்சர் :—**

ஆற்றலினுல் வடநாட்டை வென்றுன்—பண்டை
ஆட்சியையும் பெற்றுன் முன்; செழியர்,வேளிர்
தோற்றனரவ் வளவனிடம்—நாமும் போரைத்
தொடங்கஇது சமயமில்லை—மேலும் மக்கள்
நேற்றுவரை அமைதியிலே வாழ்ந்து விட்டார்
நெடும் பகையால் தென்னுடு செழிப்பில்லாமல்
மாற்றுநிலை எய்த ஒருபோதும் மக்கள்
மனம் விரும்பார் அறிஞர்புலவோர்கள் யாரும் (215)
எண்ணுர்கள் வேந்தே! என் கருத்தைஇங்கே
இசைப்பதற்கோர் உரிமை தர வேண்டுகின்றேன்

**படைத்தலைவன் :—**

கண்ணுய அமைச்சர்நீர் இந்நாட்டிற்கு—
காவலனுக் கிழுக்கின்றிக் ... ... ... ...

**இளஞ்சேரல் :—**

... ... ... ... கருத்தைச் சொல்க!

**அமைச்சர் :—**

மண்ணுளும் வேட்கையினுல் மக்கள் தம்மை
மடிப்பதனுல் வருங்கால மாந்தர் வாழ்வைப்
புண்ணுகச் செய்கின்றேம்—போரால் நாட்டில்
புதுமையொன்றும் விளைவதில்லை பிணத்தை அன்றி (216)
போரொன்றே பொருளாக எண்ணி எண்ணிப்
புரிவதனுல் ஆற்றலுள்ளோர் பக்கம் நாடு
சேரும்பின் திரும்பும்இச் செயலால் கேடு
செழிக்குமன்றிச் செழுங்கலைநல் வாழ்வு மேன்மை
நேருமென்று நினைக்கின்றீர்? தமிழ கத்தில்
நிலையான அமைதிக்கு வழிதான் உண்டா?

**படைத்தலைவன் :—**

யாருமிந்த அவலமொழி கூறமாட்டார்
அமைச்சருந்தன் மதிகுழம்பி அரற்றுகின்றுர் (217)

**அமைச்சர் :—**

மூவேந்தர் ஒற்றுமையாய் வாழ்வதற்கு
முயன்றுலித்தமிழகம்முன் னேறும் என்று...

**படைத்தலைவன் :—**

பாவேந்தர் இசைப்பார்கள்—அவர்கள் எம்போல்
படைமறவர் உளமறியார்—அவற்றைத் தங்கள்
நாவேந்தி மொழிவதுதான் விந்தை—சற்றும்
நாட்டுப்பற் றில்லார்போல் நவிலல் நன்றே?

**அமைச்சர் :—**

சாவேந்தும் உடல் வளர்க்கச் சாற்றவில்லை.
தமிழ்வாழ்விங் கழிவதைநாம் ஒப்பலாமா? (218)
சாற்றினெனென் விருப்பையினி நும்விருப்பம்...

# வளர்ந்து வாழ்வோம்!

## புலவர். தி. நா. அறிவு ஒளி

'மக்களாகப் பிறந்த யாவரும் நாளுக்கு நாள் சீர்திருந்தியும், பண்பட்டும், முன்னேறியும் வளர்ந்து வாழ வேண்டும்; பிறரை வளர்த்தும் வாழ வேண்டும்' என நம்புபவன் நான்.

திருந்த வேண்டும் என்ற ஆவலோ, ஆர்வமோ இல்லாதவர்களிடம் இது பற்றி எவ்வளவு முழங்கினாலும் பயனில்லை. ஆயின், வளரும் தமிழிளைஞர்களிடம் இக்கருத்தை விதைப்பது நல்ல விளைவை நல்கும் அன்றோ?

'வளர்ந்து வாழ்வது—வளர்த்து வாழ்வது' என்ற அறம் வாழ்க்கைக்கு மட்டுமின்றி உலகின் அனைத்துத் துறைக்கும் பொருந்தும் இன்றியமையா இலக்கணமாகும்.

தன்னலத்தைத் துறந்த பொது நலமும், பொது நலத்தைத் துறந்த தன்னலமும் நன்மை பயவாது. ஆகவே இரண்டும் பொருந்த வேண்டிய தக்க அளவில் பொருந்தினால் தான் வாழ்க்கை சிறப்புறும்.

வளர்வதற்கும், வளர்ப்பதற்கும் முன்; நிலைக்கவும், நிலை பெறவும் நாம் நம்மை உறுதியுடையராக்கிக் கொள்ள வேண்டும், அதற்குரிய முயற்சிகளில் தலைப்படுதல் முதற் கடமையாகும்.

தனிக் குடும்ப வளர்ச்சி எப்படி நாட்டின் பொது வளர்ச்சிக்கு இன்றியமையாததோ; அதே போலத் தனி முயற்சிகள் நாட்டுப் பொது முயற்சிகளுக்கு இன்றியமையாததும்; அடிப்படையானதுமாகும். ஆயிரங்கால் மண்டபத்தின் ஒவ்வொரு தூணும், தூணின் ஒவ்வொரு சிலையும் மிக மிக இன்றியமையாததே. தனித்த முறையில் அவற்றைப் புறக்கணித்தால் முடிவில் மண்டபமே சிதையக் கூடும்.

மாறவும், மாற்றிக் கொள்ளவும் வேண்டிய இன்றியமையாமை மக்களுக்கு அமைய நேரும் போது அதற்குத் தக வாழ்வதே அறிவுடைமை. ஆயின் மாறுதலால் 'பெரியதொரு ஆக்கம்' அமைய வேண்டும். வியக்கத்தக்க பண்பும் பயனும் அதனால் உருவாக வேண்டும். புதுமையை வரவேற்க வேண்டுமென்று வற்புறுத்தும் போது எல்லாப் பழமையையும் அழிக்க வேண்டுமென்று கொள்ளக் கூடாது. நமக்கு வேண்டிய பயன் பழமையிலிருப்பினும், புதுமையிலிருப்பினும் ஏற்றுக் கொள்ள வேண்டுவதே அறிவுடைமை.

தமிழரின் ஒற்றுமையும் ஒருமுக முயற்சியும் ஒருமன முற்போக்கெழுச்சியும் தான் தமிழ் நாட்டையும், தமிழையும்,

தமிழ்ப் பணபாட்டையும் வளர்க்கும்; வாழச் செய்யும். நமக்குள் நாமே பகைத்தும் பழித்தும் இடையூறு விளைவித்துக் கொள்வதுதான் இன்றைய நம் பிற்போக்குக்கெல்லாம் அடிப்படைக் காரணம்.

நாம் வளர வேண்டுமானால் நம்மை உண்மையாக உணர வேண்டும். நம் குறை—நிறைகளைத் திறனாய்ந்து தெளிய வேண்டும். குறைகளை நீக்கிக் கொள்ளப் பின் வாங்கக் கூடாது. நிறைகளை மேலும் வளர்த்துக் கொள்ள ஆர்வ முனைப்போடு முயல வேண்டும். 'திறனாய்வு' என்பது உண்மையில் மிக மிகத் தொல்லைதரும் துன்பமான தொழிலேயாம். முழு நடுநிலையோடு, நேர்மையோடு, உண்மையோடு ஆராய்ச்சி செய்யும் உள்ள உரம், அறிவு வளம், உணர்ச்சியுறுதி மிக வேண்டும். ஆனால் மிகப் பலருக்கு இவ்வியல்பு இருக்கிறதா? நாம் நம்மிடம் உள்ள ஓர் இயல்பைச் சிறப்பானது என எண்ணுவோம். அதையே நம்முடைய குறைபாடு எனப் பிறர் கருதலாம். நாம் நம்மிடம் இருக்கும் ஓர் இயல்பைக் குறை என எண்ணுவோம். அதுவே நம் தனிச் சிறப்பு என்று மற்றவர்கள் எண்ணலாம். ஆகவே மிக நுணுக்கமாக இவற்றை ஆராய்ந்து தெளிந்து ஒழுக முற்பட்டால் நம் முன்னேற்றம் சிறப்பாக அமையும். திறனாய்வு என்பது வளர்ச்சிக்கும் ஆக்கத்துக்கும் ஆர்வமும் ஆவலும் கருத்தும் ஊட்டக் கூடியதாக இருக்க வேண்டும். மாறாக நம் வளர்ச்சிக்கே வழியடைக்கும் கல்லாக இருக்கக் கூடாது.

உலகில் எந்நாட்டு மன்பதையினையும் ஊடுருவிச் சீர் திருத்தம் உண்டாக்கக் கூடிய ஒரு தொண்டு உருவாக்கப் படின் நலம் பயக்கும் என நம்புகிறேன். என் எண்ணம் செயல்முறைக்கு மிகவும் கடுமையானதும், துன்ப மானது மாகவே தோன்றும். ஆனால், அப்படியொரு முயற்சி செய்யப் பட்டால் சிறிதேனும் நல்ல பயன் விளையும்.

உள்ளச்சான்று மரத்து, உணர்வற்றுப் போனால்தான் உலகில்—வாழ்க்கையில் முன்னேறலாம் என்ற கருத்து மக்கள் உள்ளங்களில் நிலையாக ஆட்சி செய்கிறது. யாரும் முயன்று பரப்பாமலே பரவி விட்ட இக்கருத்து 'உண்மை யானது அன்று' என்று நிலைநாட்டப் பெறவேண்டும். அவ்'வுணர்ச்சி மலர்ச்சி' உண்டானாலே போதும். மக்கள் வாழ்வில் புதுமை பொலியும்.

ஆராய்ச்சி மனப்பான்மையை, பகுத்தறிவு ஆர்வத்தைச், சீர்திருத்தப் பசியை, புதுமை யெழுச்சியை உண்டாக்கும் குடும்பச் சூழலும், கல்விப் பயிற்சியும் உருவானால் தான் இனி வரும் தலைமுறைகளேனும் பண்பட முடியும்.

இன்றைய கல்வியும், கல்வித்துறையும் பயிற்றுவோரும் பிற்போக்கு மனப்பான்மையினராக இருப்பின், வரும் தலை

முறைகளும் அவ்வாறுதானே இருக்கும்? அறிவியல்பாடத்தை ஒரு மணிப்போது பயிற்றியபின், மடமை ஓம்பும் பொய்மையையும் புகட்டினல்; அது பேதைமைதானே? அறிவியல் உணர்ச்சியை ஆழமாக மாணவர் உள்ளத்தில் ஊன்றினல் தான் அறியாமை அகலும்.

'எப்படி இருந்தோம்?' என்று அறிவது 'எப்படி இருக்க வேண்டும்?' என்பதை அறிவுறுத்தக் கூடிய முறையில் அமைய வேண்டும். பொய்யான வரலாறுகள், போலி இலக்கியங்கள் கல்வியில் ஒரு சிறிதும் இடம் பெறவே கூடாது. பலகல்விக் கூடங்களும், ஆய்வெழுச்சி இல்லாத இடம் கல்வி நிலையம் அன்று. பகுத்தறி வார்மும், முற்போக்கு எழுச்சியும் இல்லாதார் எத்துணைப் பட்டம் பெற்றவராயினும் மெய் ஆசிரியர் ஆகார்.

முதலில் நிலத்தையே சீர்திருத்த வேண்டும். பிறகு தானே பயிர் வளமாக விளையும். நிலமேகளராக இருந்தால்......!

இக்கால மாணவர்கள் குறைகூறவும், குற்றங் கண்டு பிடித்து எள்ளிச் சிரிக்கவும், வீண்பொழுது போக்கவும், மடிமைப்போக்கில் மயங்கவும், இன்பமே நச்சவும் வல்லுநர்களாகி விட்டனரேதவிர; தம் அறிவை ஓம்பவும், தம்திறனை வளர்த்துக் கொள்ளவும், சிறிதேனும் முயல்கின்றரில்லை. பெரும்பான்மையோர் நிலை இத்தகையதே. தற்கால மாணவர்க்குப் பண்பாடுடைய சான்றோர் பழக்கமும், நட்பும், சூழ் நிலையும் வேண்டும் என்ற உயர்வுண்மையைக் கல்வித்துறை நம்பி, அதற்கிசைய திட்டங்களை அமைக்க வேண்டும்.

அறிவகங்களாக விளங்க வேண்டிய கல்லூரிகள், ஆரவாரக் கோட்டைகளாகப்—பொழுது போக்குக் களமாக—வேட்டைக் காடுகளாகச்—சந்தைகளாக—ஒப்பனைக் கண்காட்சிக் கூடமாக ஆகிவிட்டமை நாணத்தக்கதாம். இத்தகு நிலையை—திட்டத்தை அப்படியே குழி தோண்டிப் புதைத்து விட்டுப் புதிய—சீரிய—உயரிய பண்புள்ள—நாகரிகப் புலமை சான்ற திட்டத்தை உருவாக்க வேண்டும்.

எழுத்தாளர் — புலவர் — எனப்படுவோர் நனி சீரிய முற்போக்காளராகவும், பண்பார்ந்த சீர்திருத்தக்காரர்களாகவும், நுண்ணுணர் வினராகவும், பகுத்தறிவார்வலராகவும், அஞ்சாமை சான்ற ஆண்மைச் செம்மல்களாகவும், ஆழ்ந் தெண்ணி முடிவிற்கு வரும் ஆராய்ச்சியியல்புள்ளோராகவும், பொதுநல நோக்கமே தலைசிறந்த கொள்கையாகக் கொண்டொழுகு வோராகவும் நன்மையும் ஆக்கமும் விளைவிப் போராகவும் இருக்க வேண்டும். இவ்வாறு இன்றி, மாறுபட்டிருப்பின் மன்பதை வளர்வது அரிது. பல எழுத்தாளர்கள் நாடு வளரும் நிலைக்கு வாழ்வில்லை என்ற உண்மையை மறைப்பது உண்மையைக் கொல்வதாகும். இவர்கள் போன்றோர் பெருகினல் நாடு உயருமா? வளருமா? சிறக்குமா?

புதிய கருத்துக்களை—நாட்டுக்கு நனிவேண்டிய கருத்துக்களை ஆராய்ந்து தெளிவோடு எழுதுபவர்களே நாடு உயரவும் வளரவும் சிறக்கவும் உதவுபவர்கள். இத்தகு நல்லோருக்கு முதலில் வரவேற்பும் இருக்காது. சில வேளைகளில் எதிர்ப்பு கூட நேரும். ஆனால் காலப்போக்கில் அவர்கள் கருத்தின் அடிச்சுவட்டையே நாடு பின்பற்றும்.

எழுத்தாளர்களின் ஆற்றல் புத்துலகைச் சமைக்கக் கூடியது. அவ்வுண்மையைப் பல எழுத்தாளர்கள் உண்மையாக உணர்வதே இல்லை என்றே தோன்றுகிறது. ஏனெனில் பொழுதுபோக்கு எழுத்து' என்ற பெயரால் பலகோடிக்கணக்காணவர்களின் வாழ்க்கைப்பொழுதைப் 'பாழாக்கித் தம் பொழுதையும் வீணாக்குகின்றனரே!

கோடிக்கணக்கான இருண்ட உள்ளங்கள் உலகில் உள்ளன. இயங்கா மூளைகள், காணாக் கண்கள், கேளாச் செவிகள், இயங்கும் வாய்கள் உள்ளன. இவற்றைத் திருத்தி நலம்பெறச் செய்யவே எழுத்தாற்றல் பயன்பட வேண்டும்.

"கழிவினும் நிகழ்வினும் எதிர்வினும் வழிகொள
நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்
செவிலிக்குரிய ஆகும் என்ப" (பொருள்: 151. தொல்)

எனச்செவிலித்தாயின் கடமையை விளக்கினார் பேராசிரியப் பெருந்தகை தொல்காப்பியர். எழுத்தாளர்கள் மன்பதையின் செவிலித்தாயர்களாவர். இறந்த காலத்திலும், நிகழ்காலத்திலும், வருங்காலத்திலும் தன்நாட்டினர்—உலகினர்—கைக்கொண்டு ஒழுகுதற்கு ஏற்ற நல்லவைகளைச் சுட்டிக் காட்டுதலும், தீயவைகளைச் சுட்டிக்காட்டி; அவை நீக்குதற்குரியன என்றலும் எழுத்தாளர்க்குரிய கடமையாகும்.

மரம் எவ்வளவு அமைதியாக வளர்கிறது! அது எவ்வளவு உயரம் உறுதியோடு கிளைகள் பரப்பி, இலைகள் விரித்து வளர்ந்து நிலை பெறுகிறது! மக்களைவிடப் பல்லாண்டுகள் வாழும் உருவத்தான் நீண்டு உயர்மரங்கள் பிறர் உணராத வண்ணம் சிறுகச் சிறுகவே வளர்கிறது. அணுவணுவாக, நொடிநொடியாக வளரவேண்டியதுதான் இயற்கை அமைப்புப்போலும்! வளர்ச்சி எப்படி உருவாகிறது எனத்தெரியாமலே வளர்ந்து கொண்டிருக்கும் இயல்பை மாந்தர் உள்ளம் உணரவேண்டும். வளர்ச்சி என்பது ஆரவாரம் செய்யாமல் அமைகிறது. மக்கள் மட்டும் ஏன் ஆர்ப்பரிக்க வேண்டும்?

நாட்டு வளர்ச்சியும் ஆரவாரமின்றி, அமைதியாக, ஆயின் ஆற்றல் மிக்கதாக அமையவேண்டும். ஒரு நாட்டின் அழிபாடுகளும் அதற்கு ஆக்கமளிக்கக் கூடியதாக இருக்கவேண்டும். உள்ளார்ந்த வளர்ச்சி நிலை பெற்றதாகவும் நலம்பயப்பதாகவும் அமையும். அத்தகு வளர்ச்சிக்கும்; சீரிய வாழ்க்கைக்கும் ஏற்பவாழ ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும்.

# தமிழ் எண்ணம்

இர. குழந்தைவேலு, பி.ஏ. (ஆனர்சு)

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

என்பது வள்ளுவர்பால் முகிழ்த்தெழுந்து பொங்கிய தமிழெண்ணம். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு முளைத்த இத்தமிழெண்ணத்தின் கருத்து நிறைவு பாரதியார் உள்ளத்தில் பாய்ந்தது. அங்ஙனம் பாய்ந்து வழிந்த அவ்வெண்ணமே அவர் உள்ளத்தில் பல்கி வளர்ந்தது; ஊறி நின்றது; அந்நெஞ்சத்திலன்றோ,

"தனியொருவனுக் குணவிலை யெனில்
சகத்தினை அழித்திடுவோம்—வாழ்க"

என்னும் உரைகள் துளிர்க்கின்றன.

இத்தொடர்களின் வெறுஞ் சொற்பொருளைக் கருதுமிடத்துப் பாரதியார் மனப்போக்கு, வையத்தார் வாழ்வைச் சிதைத்தற்கு வழி வகுக்க எங்ஙனம் இடங்கொடுத்தது? அது அறமா? என இவ்வாறு சிலர் கருதுவர். இங்ஙனம், சிலர் கருத்துக் கொள்ளலில் வியப்பு இன்று. இது, பாவாணர் உள்ளத்தோடு இயைந்த எண்ணம் எனத் துணிதற்கு இயலாது. பாரதியின் பெருமனத்தைப் பின்பற்றி விளங்கிக் கொள்ள முயலாதார் இலக்கியப்பார்வை அது. பாவலர் நாட்டத்தில், கற்பார் நெஞ்சம் படியாமையால், ஐயப்பாடுகளுக்கு இடம் நேர்கிறது.

பாடலை அணுகுவது எப்படி? எவ்வகையால் புலமைத் திருவினரின் உள்ளம் அறிந்து போற்றுவது? நோக்கம் கண்டு களிப்பது? எவ்வண்ணம் அம்மனத்தை நெருங்கினால் பொருள் நுட்பம் சிதைவுறாது? என இவ்வாறு பாடலைக் கற்பார்பால் அளந்துணரும் வேட்கை பெருகுதல் வேண்டும். இவற்றை முன்வைத்துப் புலவர் நெஞ்சத்தை அறிய முயல்வது நம் கடமை. இவ்வண்ணம், நுணுகி அறிந்துகொள்ள இயலாவிடில், உரை செய்யுங்கால் பிழை எழக் காணலாம். எனவே, மேலே காட்டிய,

"தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்—வாழ்க"

என்னுந் தொடர்களின் விழுமிய கருத்தாழத்தினை முதற்கண் உணர முற்பட வேண்டும். இங்கு எழும் ஐயங்களை, மற்றப் பாட்டுக்களின் கருத்துக்கள் துணையால் தெளிவது முறை. மிக விழிப்போடு உயர்ந்த தமிழெண்ணங்கள்—மரபு—உணர்த்தும் உண்மையுடன், பாரதியின் எண்ணக்கருவையும் பாடல் அமைப்பையும் சொற்பெய்வின் நோக்கத்தையும் ஒப்பு நோக்கவேண்டும். இம்முறையைக் கைக்கொள்ளலால், அவர்

பாடல் தொடர்களைக் கற்பவர் அறிவில் கிளைக்கும் ஐயங்கள் போகும். ஒவ்வா முறையில் வலிந்து பொருள் காட்டமுனைதல்—மரபை விலக்கி உள்ளங்காண விழைதல்—பாரதியார் புகழ்க்கு மாசு செய்வதாகும். "உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே" (தொல்,பொருள்)என்பது தொல்காப்பியத்தமிழ் காட்டும் நெறி.

பாரதி, ஒருவன் உணவு பெருது அல்லலுற்று ஆற்ருது வாடினுல், உள்ளங்கொதித்து உலகைச் சிதைக்கும் கருத்தினர் அல்லர்; ஒருவன் சோம்பலில் களித்து உழையாது உயிர் வாழ்தலை இழித்தனர். இவை, அத்தொடர்களில் பொலியும் தூய்மை, இத்தூய்மை புத்துலகப் பாவலரின் நெஞ்சம் செம்மை நிறைந்தது என்பதனைப் புலப்படுத்தும்; தூய உணர்வை எடுத்துக்காட்டும்.

" என்றன் பாட்டுத் திறத்தாலே – இவ்வையத்தைப்
பாலித்திட வேணும் "
(தோத்திரப்: பாடல்கள்: காணி நிலம் வேண்டும்.)

எங்ஙனம், இவ்வண்ணம் "மாநிலம் பயனுற வாழ்வதற்கு" எண்ணிய தமிழ்ப்பாவாணர் மனம், பாழுஞ்சேற்றில்–உலகைக் குலைக்கும் கொடுஞ்செயலில்—இறங்க எழும்? அருள் சுரக்கும் உள்ளத்தில், அழிவெண்ணம் அரும்புமோ அன்றி, அவ்வெண்ணம் பூக்க வழி உளதா? மக்களை அலைக்கும் வெறி எண்ணக் களியாட்டைப் பாரதியாரின் நெஞ்சம் அறியாது. இதனை "ஜகத்தினை அழித்திடுவோம்—வாழ்க!" என்னுந்தொடரின் ஈற்றில் "வாழ்க" எனச்சொல் நிற்பதுகொண்டே முடிவு செய்யலாமன்ரே!

அழகிய நுட்பச் செறிவும் ஈண்டு உண்டெனலாம். இவ்விடத்து, அந்நுட்பப் பொலிவினைக் காண்பது, பாடல் தொடரின் சிறப்பு நிலை வெளிப்பட இடங்கொடுப்பதாகும். ஊக்கமின்மையால் முயற்சியை அறவே கொன்று, உழைப்பில் குன்றி, இரந்து நாணம் தொலைத்து வாழும் வாழ்வைப் பாரதியார் எண்ணி நகைத்து நிற்கின்ருர். இஃது இயற்கைச் செந்நெறியற்ற வாழ்வும் ஆம் என்பது பாரதி எண்ணம். தனியொருவனும் பசி நீங்கி, மண்ணில் நல்லவண்ணம் வாழாமையைப் பாவணர் உணர்ந்து நெஞ்சுருகிக் குழைந்து எண்ணுவர்; "நெஞ்சு பொறுக்குதிலையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்" என நாணுவர். இதனை இங்கு எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

"உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை
நிந்தனை செய்வோம்" (சுதந்திரம்: சுதந்திரப்பள்ளு.)

" ஒய்தல் ஒழி" (நீதி: புதிய ஆத்திசூடி.)

" நாளெலாம் வினைசெய் " (நீதி: புதிய ஆத்திசூடி )

"வலிமை யற்ற தோளினுய் போ போ போ
மார்பி லேஒ டுங்கிஞய் போ போ போ"
(தேசீய கீதம்: போகின்ற பாரதமும் வருகின்ற பாரதமும்.)

"ஊக்கமும் உள்வலியும்
உண்மையிற் பற்று மில்லா
மாக்களுக்கோர் கணமும்—கிளியே
வாழத் தகுதி யுண்டோ?"
(தேசிய கீதம்: நடிப்புச் சுதேசிகள்.)

"வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்!—இங்கு
வாழும் மனிதரெல் லோர்க்கும்;
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர்"
(பல்வகைப் பாடல்கள்: நீதி: முரசு.)

என வரும் மொழிகள், பாரதியின் எண்ணத்தைத் தெளிவுறுத்த வல்லன.

சோம்பலுக்கு இரையான மனிதன், தன்னையே மறந்த நிலையில் வளர்ந்து வருகின்ருன். ஆதலான், அவன் கவலையற்று உழைப்பில் கருத்துச் செலுத்தவில்லை. இதனை, அவன் நெஞ்சில் விளங்கச் செய்தல் வேண்டும். அவன் உள்ளத்தில், தன்னையே மறக்கும் நிலை எய்த மறதி குடிபுகுந்தது; உழைத்து இன்பத்தில் திளைத்து வாழ வல்ல அவன் வாழ்க்கைக்குச் சோம்பல் கேடு சூழ்ந்து வருதல் உண்மை. இவ்வாறு 'தனியொருவன்' உள்ளத்தை நன்கு விளங்கிக் கொண்டதற்குப் பொருந்த,

"இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து" (குறள்: 870)

என்ற குறள் நினைவு பாரதியார்க்குத் தோன்றுகின்றது. எனவே, தொடக்கத்தே 'அவனை' அடிமைப்படுத்திய சோம்பலைச் சீராகக் களைதல் பயன் சுரப்பது; முதிர்ந்தால் நாட்டின் அவலமாய்த் தழைத்துப் பெருகும் என்ற எண்ணம் பிறந்தது. இதனைச் சோம்பல் வாய்ப்பட்டு வாடும் அவனுக்கு—உணவில்லை எனும் தனியொருவனுக்கு—உள்ளமுவக்கக் கூறப் புகுகின்ருர் பாரதி. அவன் வாழ்தல் வேண்டி உள்ளத்தை நாடிக் கற்றதனுலாய உயர்ந்த மனநிலையின் பயன் இது.

அக்கேட்டை உணர்ந்திடுமாறு அவனுக்குத் தெளிவுறுத்தல் கூடும் என்பது பாரதி நம்பிக்கை. ஆதலான் அம்மனத்திற்கு ஆற்றலுடன் தெளிவூட்டுதல் வேண்டும்; அவனை, அவனே உணர்ந்து எண்ணிப்பார்க்க வல்ல சூழ்நிலை எழுப்புதல் வேண்டும்; சோம்பலில் படிந்துகிடத்தல் கூடாதென்பதனை நினைவில் மலரச் செய்தல் வேண்டும். இவை, பாரதியின் உள்ளக்கிடக்கை அப்பெருமகனுர்,

"சோம்பல் மிகக் கெடுதி பாப்பா"
(பல்வகை: நீதி: பாப்பா பாட்டு.)

எனக் குழந்தைக்கு அறிவுறுத்தும் தமிழிலும் இவ்வெண்ணமே நிலவுகின்றது.

இந்நிலையினை எண்ணி எண்ணித் தெளிந்த இனிய விளக்கத்தைப் பாரதியார்பால் எழுந்த பாத் தொடர்களில் காண்கின்றோம். இவ்வண்ணம், அவர்களதாகவே — சோம்பல் நோய் பிடித்த நெஞ்சத்தவர்களதாகவே—தளிர்த்து முறுகிய எண்ணம், பாடலாக விளைந்தது, அதன் பயனை உள்ளம் கலந்து நவில்தொறும் நெருங்கிப்பயின்று ஈடுபடும் அவர்கள் நெஞ்சத்தே கலந்து ஊன்றி உறவாடச் செய்தல் வேண்டும், இதனையே தம் கடனாகக் கொண்டவர் பாவலர், முயற்சியின்மையால் உழைத்து வாழ்தலை, இழிவெனக் கருதி இரப்பவன் நிலைக்கு நொந்து உருகினர் அவர், அவன் நெஞ்சத்திற்கு நாணம் ஊட்டித் திருத்தல் இயல்வதே என்னும் நம்பிக்கையில்,

"தனியொருவனுக்கு குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்"
(தேசிய கீதங்கள் : பாரத சமுதாசம்)

என இசைத்தார்.

'நாண்உடைமை மாந்தர் சிறப்பு' (குறள்: 1012) அன்றோ? முயற்சியால் தனி ஒருவனும் பசியாறி வாழும் நல்லுலகம் காண விழைந்த பாரதியின் கருத்தைத் தெளிதற்கு,

"வண்மை யில்லையோர் வறுமை யின்மையால்"
(கம்பரா, பாலகாண்டம் : நாட்டுப் படலம்)

"கள்வா ரிலாமைப் பொருள்காவலு மில்லை"
(கம்பரா, பாலகாண்டம் : நகரப் படலம்.)

"எல்லாரு மெல்லாப் பெருஞ்செல்வமு மெய்த லாலே
இல்லாரு மில்லை யுடையார்களு மில்லை மாதோ"
(கம்பரா, பாலகணடம்: நகரப் படலம்.)

எனக் கம்பர் குறிப்பனவும் அறிதற்பாலன, முயற்சி மிக்க உழைப்பு ஓங்கிப் பெருகிய இடத்தில் வறுமை புகாது ; ஓடி நீங்கும். வறுமை வறுமையுற்றால் வள்ளன்மை அவ்விடத்தை விட்டகல வழிதேடி நிற்றல் இயற்கையே. உழைப்பிடை வலிவு பெற்ற நெஞ்சினைப் பிறன் பொருள் கொள்ளும் வேட்கை பற்றுமோ? அங்குப் பொருள் காவலுங் காணுதற்கியலாது. உழைப்பு எண்ணம் முதிர முதிர, வறுமை உரமிழந்து ஒழியும், ஒருவன் பசித்தொல்லையினைத் தாண்டும் ஆற்றலுறுகின்றான். உழைப்பால் வாராததும் உண்டோ? உழைப்பிற்கு உண்டோ வறுமையை வளமுறச் செய்யுந் திறன்? இல்லை, இல்லை, முயற்சி, வறுமைக்கு வாழ்வு நல்காது, எல்லா வகையான செல்வங்களும் நிறைந்து விளங்கின், வறியர் — செல்வர் என்னும் வேற்றுமைகள் எங்ஙனம் அங்குக் குடிகொள்ள இயலும்? எல்லாம் உழைப்பு வழங்கும் வன்மை! முயற்சி தரும் பெருமை! முயற்சியினிடத்து உள்ள நம்பிக்கை!

இத்தமிழெண்ணங்கள் அகத்தே பரந்து கலந்து கரைந்து நிற்க வாழ்ந்தார் பாரதியார். ஆதலன், அவர்

எண்ணப் போக்கும் அங்ஙனமே ஒப்பற்றதாய் உயர்ந்து விளங்குவதாயிற்று. இங்கு, உலகை வாழ்விக்க முனையும் சான்றோர் மனப்போக்கு, வையத்தார் வாழ்வைச் சிதைத்தற்கு வழி வகுத்து, மக்களை அவலங் கொள்ளும் வண்ணம் குழப்பத்தில் ஆழ்த்திக் கரையேறாது வாடச் செய்தற்குத் துணிதல் அருமை என்பது உணரத் தக்கது.

மாண்பார்ந்த தமிழ் நெஞ்சம் எவ்வழி, தமிழ் எண்ணம் அவ்வழி, தமிழ் எண்த்ண தூய்மை, உலகம் தம் வாழ்வைத் தடையின்றி வாழ வழிகாட்ட வல்லது; பயனூட்டுந்திறத்தது. எனவே, கால்வழி கால்வழியாய் நிலவிய எண்ணத்தின்—முயற்சிச் சிறப்பினை அறிவுறுக்கும் எண்ணத்தின்—மண்ணில் நல்லவண்ணம் வாழ நன்றின்பால் செலுத்தும் எண்ணத்தின்—பாதுகாவலர் பாரதியார் நெஞ்சத்தில், உலகை அழிக்குங் கொலைக்கருத்து எங்ஙனம் முளைக்கும்? அதனைக் கருதற்கு இடமேது? கருதுக!

அவன் மனத்தில் உறுத்தும் வண்ணம் உணர்த்தித் திருத்தலே தக்க முறை என்பதுவே பாரதி நோக்கம். தம் கருத்தை வெளிப்படையாகச் சுட்டவில்லை; குறிப்பாகத் **'தனி ஒருவனுக்கு உணவின்மையாயின் உலகை அழிக்க'** எனக் கடுஞ்சொல் கொண்டு மொழிவார்போல், அவன் விரும்பி வளர்க்கும் முயற்சிக் குறையை இடித்துரைத்தார்; அக்குறையால் ஒருவனுக்கு உணவில்லை எனக்கூறும் சிறுமையின் இழுக்கை இனிது வெளிப்படுத்தினார். இங்ஙனம், உழையாத அவன் உளங்கொளக் கூறலில் பொலியும் நாகரிகத்தின் அழகே அழகு! பாரதி,

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" (குறள் : 948)

என்னும் மொழிவுக்கேற்ப, அவன் நெஞ்சினைச் செவ்வி தாக்கி, நேர்படுத்தும் எண்ணத்துடன் உள்ளந்தளிர்ப்பத் தீண்டினார்; 'உளங்கனிந்த போதெல்லாம் உவந்துவந்து' (அப்பர்) சொல் வதைக் கடமையாகக் கொண்டார்.

மக்கள் நெறிபிறழ்ந்து செல்லுங்கால் மேற்சென்று—முற்பட்டுச் சென்று—நல்லுணர்ச்சியை ஊட்டுவதே பாவாணர் தொண்டு. எனவே, பாரதி, உழைப்பை புறக்கணித்தல் வேண்டா என, முயற்சிப்பற்றை மனத்தைவிட்டு அகலாது விளங்குமாறு விதைத்தார் என்பது மகிழ்ச்சி விளைக்கின்றது. முயற்சி ஒளிந்த உள்ளத்தில் குன்றா முயற்சி சிறக்க அறிவுறுத்தி, அவர் குறையைக் கடிதற்குக் கையாண்ட வகை விழுப்பமுடைத்து மரபு வழிவந்த தமிழ் உணர்வு—தமிழ் எண்ணம்—மிக்கிருந்த நெஞ்சமன்றோ? இவ்வகையினை—'செங்கடு மொழி'த்திறத்தினை (தொல். பொருள்; 114)—உணர்ந்து தெளிந்திருத்தலில் வியப்புறுதற்கு வாய்ப்பில்லை.

———